ஸர்வதாரி ஹூ
பங்குனி மீ

ஸம்புடம் - 8
ஸஞ்சிகை - 3

MAR 1949
MADRAS
669

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்கு மிடம் :

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

18925-6

வர்ஷச் சந்தா:
ரூபா 3—0—0

March 1949
Vol. 8 No. 3

விஷய ஸூசிகை.

		பக்கம்.
1.	ஸ்ரீ அழகியசிங்கருடைய அவதார மஹிமா	62
2.	ஸ்ரீ அழகியசிங்கரின் க்ஷமா குணம்...	68
3.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	74
4.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	78
5.	திருப்பாவை	79
6.	பகவத் தயை	81
7.	செய்திகள்	85
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	89

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

10 MAR 1949
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 8	ஸர்வதாரி ௵ பங்குனி ௴	ஸஞ்சிகை 3

"ஸுஶோபிதே ஶாரதசந்த்ரமண்டலே
ஸுவாஸமாஹ்ருதகஞ்சுகாந்திதே ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹசரணார்ப்பிதா ।
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

1.89256.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோபயதீந்த்ர மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ அழகியசிங்கருடைய அவதார மஹிமா

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-வது திவ்யாஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன்,

'கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:।
க்வசித் க்வசிந்மஹாபாகா: த்ரமிடேஷு ச பூரிஶ:॥'

என்கிறபடி, இக்காலத்தில் நாராயண பராயணர்கள் பெரும்பாலும் அவதரிக்குமிடமான த்ரமிட தேசத்தில், அதிலும், முத்திதரும் நகரேழில் முக்கியமான காஞ்சீ மண்டலத்தில், அதிலும், 'க்ஷிதிவ்ரூபம்ய நிவாஸதா' வென்று ஸுப்ரஸித்தரான ஸ்ரீஷஷ்ட பராங்குஶ யதீந்த்ர மஹா தேசிகனுல் ப்ரதிஷ்டாபிதமாய் முத்தீ நான்மறை ஐவகை வேள்வி ஆறங்கம் பன்னினரான ஶரணாகதி நிஷ்டர்கள் வஸிக்கும் உயர்ந்த இடமாகையாலே இறைஞ்சுமேடு என்று ப்ரஸித்தமான அக்ரஹாரத்தில், அதிலும், 'குலங்களாய வீரிரண்டி லொன்றிலும் பிறந்திலேன் நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன்' என்று குறை சொல்லிக் கொள்ள வேண்டாதபடி, அமரவோ ரங்கமாறும் வேதமோர் நான்கு மோதி தமர்களில் தலைவராய சாதி யந்தணர் குலத்தில், அதிலும், 'ஏழாட்காலம் பழிப்பிலோம்' என்கிறபடியே ஸப்த புருஷ பரம்பரையிலும் சிந்தை மற்றொன்றின் திறத்த தல்லாது சிங்கப்பிரா னடியிணையையே சிந்தித்திருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில், அதிலும், 'செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர் திசைமுகனையனையவர்கள் செம்மை மிக்க' என்கிறபடியே 'அஸாதாஸாதாரண உபய வேதாந்த விஜ்ஞாநமாகிற உபபத்தி பூமாவினாலே இவர் ஸ்ரீ சடகோபனுக்கும் ஸ்ரீ பகவத் ராமாநுஜனுக்கும் ஸமாநமானவர்' என்று அக்காலத்து வித்வத் ரத்நங்களினாலே உத்ப்ரேக்ஷித்து ஸமர்ப்பிக்கப்பட்டதான ஸ்ரீ சடகோபராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன் என்கிற திருநாமாலங்க்ருதராய், ஸ்ரீ அஹோபில மடத்தில் 34-வது திவ்யாஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கருடைய திரு[illegible]சத்தில், அதிலும், 'உண்டியே உடையே உகந்தோடுமிம் மண்டலத்தொடும் கூடுவ தில்லையான்' என்கிறபடியே ஸகல விஷய

வாஸநா வைதேசிகராய், திருமகள்நாதன் திகழ்ந்துறையும் வாநுடுகந்த முமுக்ஷுக்களுக்குள் ப்ரதாநராயிருந்த ஆதிவராஹாசார்யருக்குத் திருக் குமாரராய், பாரத்வாஜ கோத்ரத்தில் பஹுதாந்ய வர்ஷத்தில் தை மாஸத்தில் உத்திராட நக்ஷத்ரத்தில் அவதரித்தருளினர். பிதாவினுலே யதாகாலம் ஜாத கரணம் செய்யப்பட்ட பிறகு, ஸர்வ குணோபேத பரம மங்களமான அவதார காலத்தினுடைய மஹிமையை யறிந்த ஜ்யோதிஷிகர்கள், 'இக்குழந்தை விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களுக்குள் ப்ரதாநனாய் விளங்கப்போகிறான்' என்று சொன்னதைக் கேட்டுப் பிதா, விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ப்ரதாந ப்ரவர்த்தகரான ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருநாமமான ரங்கநாதன் என்கிற திருநாமத்தை நாமகரணம் பண்ணி, பிறகு உபநயநாந்த ஸம்ஸ்காரங்களையும் யதாகாலம் யதாசாஸ்த்ரம் செய்வித்தருளினர்.

இப்படிப் பிதாவினுலே உபநயநாந்த ஸம்ஸ்காரங்களைப் பெற்ற ஸ்ரீ அழகியசிங்கர், ஶிகா மௌஞ்ஜி அஜிந தண்ட கமண்டுலு யஜ்ஞோபவீதாதிகளான ப்ரஹ்மசர்ய லக்ஷணங்களோடும், ஸ்நாந ஸந்த்யோபாஸந ஸமிதாதாந ப்ரஹ்மயஜ்ஞாதி தர்மாநுஷ்டாநங்களோடும், 'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:' என்று அவச்ய கர்த்தவ்யமாக விதிக்கப்பட்ட ஸ்வஶாகையினுடைய அத்யயநத்தை ஸ்வாமியினிடத்தில் குற்றமின்றிக் குணம் பெருக்கிக் குருக்களுக்கநுகூலராயிருந்து செய்தருளினர்.

பிறகு ஸ்ரீ அஹோபில மடம் 35-வது திவ்யாஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகன் ஸந்நிதியில் ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணமான பஞ்சஸம்ஸ்காரங்கள் அநுக்ரஹிக்கப் பெற்றார். பிறகு அத்யயநம் பண்ணப்பட்ட வேதத்தினுடைய அர்த்தஜ்ஞாந வைஶத்ய ஹேதுவான பூர்வ மீமாம்ஸாதி சாஸ்த்ரங்களுடைய அத்யயநத்தில் அபிருசியினாலே, செழுமா மணிகள் சேரும் திருக்குடந்தையில் ஶதுஶாஸ்த்ர கல்பதருவென்று ப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உ.வே. சேஷாசார்ய ஸ்வாமியினிடத்தில் தர்க்க மீமாம்ஸாதி ஶாஸ்த்ராத்யயநத்தைப் பண்ணி, அந்த ஶாஸ்த்ரங்களுடையவாத க்ரந்தங்களை மைஸூர் காசீ முதலிய தூர தேசங்களிலிருக்கும் பண்டித ச்ரேஷ்டர்களிடத்தில் அத்யயநம் செய்து, 'ஶேஷ: கணவஶ்ச வலித்ருண கணு நா வா ரக்ஷிணா' என்னுமாப்போலே அவர்களிலும் அதிஶயித ஶாஸ்த்ர ஜ்ஞாநத்தை யுடையவராய் விளங்கினர்.

பிறகு, 'யதா வாயும் ஸமாஶ்ரித்ய ஸர்வே ஜீவந்தி ஜந்தவ: । ததா க்ருஹஸ்தமாஶ்ரித்ய ஸர்வே ஜீவந்தி ஆஶ்ரமா:॥' என்கிற மநு வசநத்தின்படியே ஸர்வோபகார க்ஷமமான க்ரஹஸ்தாச்ரமத்தினுடைய தர்மாநுஷ்டாநங்களில் ச்ரத்தாதிஶயத்தினாலே ஸத்குல ப்ரஸூதையாய்க் குணதிகையுமான ஒரு கந்நிகையை ஶாஸ்த்ரோக்த க்ரமமாக விவாஹம் செய்துகொண்டு, அபிகமநாதி பஞ்சகால பராயணராய், நித்ய தர்மாநுஷ்டாநங்களில் ஸஉ ச்ரத்தராய் எழுந்தருளியிருந்தார். பிறகு ஸ்வாபாவிகமான ஸதஸத் விவேசந ஸாமர்த்ய புத்தி வைலக்ஷண்யத்தினாலே ப்ரத்யக்ஷ த்ருஷ்டால்பத்வாதி தோஷ ஸப்தகங்களோடு கூடின

கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலும் ஐங்கருவி கண்ட சிற்றின்பங்களில் விரக்தராய், 'பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாந்நாஸ்த்யக்ருதஃ க்ருதேந' என்கிற ச்ருதியின்படியே கர்ம மீமாம்ஸா சாஸ்த்ர விசாரத்தி னலே 'யஜ்ஞ சாதுர்மாஸ்யேந ஸம்ஹிதம் ந அக்ஷய்யம் ஸுக்ருதம் நச்வரம். அக்நிஷ்டோம நீதம் அதஃ ஸர்வம் ஸ்வ: பதாஸ்யம்' என்று அதர்வண வேதத்திலும், 'நித்யைவ ஸர்வம் ஸ்வர்கம் ஸர்வம் சாதுர்மாஸ்யஹோமயம். நரகே சாதுர்மாஸ்யவேதநா ஸர்வம் சர்வதம்' என்று பாரதத்திலும் சாச்வத ஸுகமாகச் சொல்லப்படு கிற ஸ்வர்க்காதி ஸுகங்களும்,

"நதாந்த்யஸ் க்ரியதே கர்ம கர்மணோ ந ஹி ஜாயதே ।
ஸோऽத்ர தோஷோ மம மத: தஸ்யாந்தே பதநம் புந: ॥
அஸந்தோஷ: பரீதாப: த்ருஷ்ட்வா தீப்ததரா: ச்ரியः ।
யதவஸ்தமிதோ யாதி ஸ்த்ரீணாம் தஸ்ய ஸுதுஷ்கரம் ॥
ப்ரஹ்மாதிஷு ச லோகேஷு தத: பிபதிஷோர்பயம் ।
மஹாதோஷேண சாயுஷ்ம ந ஸ்வர்கே ஸுகமேவ வா ।
சுப்ரஹ்மவநாதேதே தோஷா ஸந்தி மஹாமுநே ।
அத ஏவ ஹி நேச்சந்தி ஸ்வர்கப்ராப்திம் விசக்ஷிண: ।"

என்று மஹா பாரதத்தில் தோஷபூயிஷ்டங்களாகவே சொல்லப்படுகிறபடியால், அப்படிப்பட்டவைகளான ப்ரஹ்மலோக பர்யந்தங்களான பரலோக ஸுகங்களிலும், 'மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும் அன்னவர்தம் பாடலொடும் ஆடலவை யாதரியேன்' 'உம்பருலகாண் டொருகுடைக்கீ ழுருப்பசிதன் அம்பொற் கலையல்குல் பெற்றாலு மாதரியேன்' என்கிறபடியே அத்யந்த விரக்தராய், அதைப்போலவே 'குறுகாநீளா இறுதி கூடா யெனையூழி, சிறுகா பெருகா வளவிலின்பம்' என்று ஆத்மாநுபவ ரூபமான கைவல்ய ஸுகத்தை சாச்வதமான இன்பமென்று சொல்வதும், 'ஸர்வேப்யோ ஹ்யல்பத்வாத்' என்கிற பகவத் வாக்யத்திற்கு விருத்தமாகையினலும், அந்தக் கைவல்யத்தையே, 'மறுகாலின்றி மாயோனுனக்கே யாளாகும் சிறு காலத்தை யுறுமோ' என்று நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுகபாவைக லக்ஷணயான பகவத் ப்ராப்தியைக் காட்டிலும் மிகவும் சிறியதாகச் சொல்லுகையாலும், ஆத்மாநுபவ ரூபமான கைவல்யத்திலும் அத்யந்த பராங்முகராய், இப்படிச் சொல்லப்படுகிற ஸகல தோஷ வாஸநா விரஹிதமாய் நிரஸ்தாதிசய நித்யாநந்தமயமான பகவத் ப்ராப்தி ரூபமான மோக்ஷ ஸுகத்தில் அதிகமான ஆஸ்தையினலே தத்ஸ்வரூப ஸ்வபாவ தது பாய நிர்ணயத்தில் த்வராதிசயத்தினலே தத்விஷயக ஸம்சயாதிகள் நிச்சேஷமாகப் போகும்படி அருள்புரிந்த சிந்தையை அடியார்மேல் வைத்து அன்போடு உபதேசிக்கக் கூடிய ஆசார்யர் இக்காலத்தில் யார் என்று ஆராய்ந்து பார்த்தவிடத்தில், குலக்ரமாகதமான ஸ்ரீ அஹோபில மடாஸ்தாநத்தில் தத்காலத்தில் அழகிய சிங்கர் இல்லாததினல் 'வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லா யவர்க்கும்

ஞானப்பிரானை யல்லா வில்லை நான் கண்ட நல்லதுவே’ என்று ஸகல லோக ஸம்ரக்ஷணார்த்தமாக வந்த ஞானப்பிரான் தானாகவே வந்தவதரித்த இடமாகை யினாலே ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ர மென்று ஸுப்ரஸித்தமான ஸ்ரீ முஷ்ண திவ்ய க்ஷேத்ரத்தில் நித்வாஸ ரஸிகராய் ஶததூஷணீ முதலான ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி களுக்கு வ்யாக்யாதாவான மஹாசார்யாதி வித்வந்மணிகளால் அலங்க்ருதமான வாதூல வம்ஶாம்புதிக்கு விமல சந்த்ரன்போல் விளங்கினவராய், ‘சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா வறநெறி யாவும் தெரிந்தவன்’ என்கிறபடியே விதித ஸகல வேதிதவ்யராய், ஸகல தர்மாநுஷ்டாந கல்யாண குணாவாஸ பூதராய், ‘திருவுக்கும் திரு’ என்னுமாப்போலே ‘க்ஷமைக்கும் க்ஷமை’ என்று கொண்டாடும்படியான அநிதரஸாதாரண க்ஷமா குண நிதியாய், பகவத் பக்த்யாதி விஷயத்தில் ‘உபமாநமஶேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாபவத்’ என்று சொல்லப்படுகிற ஸகல ஸாதுக்களுக்கும் உபமாந பூதனான ப்ரஹ்லாதாழ்வானுக்கு ஸமாநராய், ஸர்வ ஜநாஸ்வாதநீயாத்ம குண கண ப்ரகாசத்தாலும், ‘அதீவ ப்ரியதர்ஶந:’ என்கிறபடியே அளவிறந்த அழகமர்ந்ததாய், ஷோடச வர்ண ஸ்வர்ண ஸவர்ணமான திருமேனியினுடைய ஸுஷமாவினாலும் ‘ஸ்வர்ணம் ஸ்வாமி’ என்று ஸுப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உப. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியை ஆசார்யனாக ஆச்ரயிப்பதே உசித மென்று நிச்சயித்து அப்பொழுதே ஸ்ரீ முஷ்ணத்திற்கு எழுந்தருளி ஸமித்பாணியாய் ஸ்வாமி திருமுன்பே தண்டன் ஸமர்ப்பித்து,

“ஶ்ருதம் ஹ்யேவ மே பகவத்த்ருஶேப்யஸ் தரதி ஶோகமாத்மவிதிதி ।
ஸோऽஹம் பகவ ஶோசாமி தம் மா பகவாந் ஶோகஸ்ய பாரம் தாரயது ॥”

என்கிறபடியே கண்ணும் கண்ணீருமாய் ப்ரஹ்மவித்யாலாப நிமித்த சோகாதிசயத்தைத் தெரிவித்து, ‘கார்பண்யதோஷோபஹதஸ்வபாவ: ॥ ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்’ என்று ப்ரஹ்ம ஜ்ஞாநார்த்தமாக ஶரணமடைந்து நிற்க, ஸ்ரீ ஸ்வர்ணம் ஸ்வாமியும் ‘ஸத்புத்திஸ்ஸாதுஸேவீ’ என்று அருளிச்செய்த ஸச்சிஷ்ய லக்ஷணங்கள் ஸ்ரீ அழகிய சிங்கரிடத்தில் ஸம்பூர்ணமாக இருப்பதாக ஏற்கெனவே பஹுமுகமாகக் கேட்டிருந்தபடியே அக்குணங்களை எல்லாம் நேராகக் கண்டு விஸ்மிதராய், அதிக ஸந்துஷ்டராய், ஸ்ரீ அழகிய சிங்கருடைய விநய ஸம்பத்தோடு கூடின வைதுஷ்ய ஸம்ருத்தியைப் பார்த்து, இவர் கருவிலே திருவுடையவராய்,

“ப்ரதிஷ்டாபித வேதாந்த: ப்ரதிக்ஷிப்த பஹிர்மத: ।
பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரிகல்யாணபாஜநம் ॥”

என்கிறபடியே, ‘நாஸ்திக மத நிராகரணத்தோடு பகவத் ராமாநுஜ தர்ஶநம் தழைத்தோங்கி வளரும்படி செய்யக்கடவர்’ என்று திருவுள்ளம்பற்றி அப்படியே அநுக்ரஹித்து, ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஸ்ரீ பாஷ்யாதி ஸகல வேதாந்த க்ரந்தங்களையும் ரஹஸ்ய க்ரந்தங்களையும் சததூஷண்யாதி ஸகல வாத க்ரந்தங்களையும், தொண்டர்க் கமுதுண்ணும்படியாய்ச் செவிக்கினிய செஞ்சொல்லான த்ராவிட வேதாந்தங்களையும் பூர்ணமாக உபதேசித்து புந: ச்ரவண நிரபேக்ஷமான சிஷ்ய புத்தி வைலக்ஷண்யத்தைக் கண்டு உள்ள முகந்து மகிழ்ந்து எழுந்தருளியிருந்தார்.

இப்படி ஆசார்யாநுக்ரஹ விசேஷத்தோடு உபதேசிக்கப்பெற்ற ஸ்ரீ அழகியசிங்கரும் இப்படி ஶாஸ்த்ரவ்யுத்பத்தி ஸஹகாரிணி மநீஷாவோடு கூடின மநீஷா விசேஷத்தினலும்,

‘தஸ்ருதம் ஸம்ஸயோஷம் குஹதெவளவஜைஹிகழ ।
வாவஉாஹ்யாவெ ந தெவெநவ ஹியதெ ஹ்யவஶாவி ஷஃ ॥’’

என்னுமாப்போலே வாவஉஜநாயீத ஸகல ஶாஸ்த்ர வாஸநாவிஶெஷ ஸம்ஸ்க்ருத நீஷித வ்யுதிஹா விசேஷத்தினலும், ஸக்ருத் ச்ரவண மாத்ரத்தினலே ஸம்யக் க்ரஹீதா விஸ்ம்ருத ஸகல வேதாந்த விஜ்ஞாநராய், அதில் அநவரத பரிசயத்தினலே வேதாந்தங்களில் சொல்லப்படும் தத்வஹித புருஷார்த்தங்களில் தெளிவும் துணிவும் த்வரையு முடையவராய், ஆவிதிகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பங்களான ஐஹிகாமுஷ்மிக போகங்களில் ஆஶாலேஶ விரஹிதராய், ‘மாக வைகுந்தம் காண்பதற் கென்மன மேகமெண்ணு மிராப்பக லின்றியே’ என்கிறபடி பரமபுருஷார்த்தமான ப்ரஹ்மாநந்தாநுபவத்தில் ஆஸ்தையாலே அதற்கு ஹேதுவான திருநாராயணனுடைய திருவடிகளில் ஆத்மரக்ஷாபர ஸமர்ப்பணத்தை அநுஷ்டித்து க்ருதக்ருத்யராய் நிர்ப்பரராய் நிர்ப்பயராய், இங்கு எழுந்தருளியிருக்கும் காலத்தைப் ‘பழுதே பல பகலும் போயின’ என்றும் ‘போக்கினேன் பொழுதினை வாளா’ வென்றும் சொல்லுகிறபடி வ்யர்த்தமாகப் போக்கத் திருவுள்ள மில்லாமல், பஹு ப்ரமாண ப்ரஸித்தமாய் ஸத்ஸம்ப்ரதாயாகதமான ஶாஸ்த்ரார்த்தங்களுக்கு விரோத ஸம்பவ ஸமயத்தில் ப்ராமாணிக ஶாஸ்த்ரார்த்த ஸம்ரக்ஷணார்த்தமாக, ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா உக்திநிஷ்டாபரணம் உக்திநிஷ்டாபரணோத்யோதம் முதலிய க்ரந்த நிர்மாணத்தையும், ‘ஸுவஶெஷாஂஅ வொயநழ’ என்கிறபடியே யதீச்வர ஸரஸ்வதீ ரஸாநுபவ பூர்வகமாக ஸத்தர்க்க தந்த்ர பரிகர்மமான ஶாரீரக ஶாஸ்த்ர ப்ரவசநத்தைத் தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்தித்திருக்கும் ஆழ்வார்கள் அருளிச்செயல்களுடைய அநுபவ ப்ரவசநங்களையும், ‘ஸுஅஉாவதாரவெவா அ’ என்கிறபடியே அவ்வநுபவ பரீவாஹமாய் ஸர்வாதிஶாயி ஷாட்குண்ய பூர்த்தியாலும், தேசம் காலம் வஸ்துக்களாகிற த்ரிவித ஸௌலப்யாதிஶயத்தினலும், ‘அரங்கத்தமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணு’ வென்னும்படியான ஸௌந்தர்ய ஸம்ருத்தியாலும், ‘இச்சுவை தவிர யான்போ யிந்திர லோக மாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்’ என்று சொல்லும்படி யிருக்கிற அர்ச்சாவதார குணநுபவத்தையும், இவை எல்லாவற்றுக்கும் ஹேதுவாய் மேலானதாயிருக்கும் ஆசார்யனுடைய மாநாதிலங்கியான மஹா குணநுபவத்தோடு கூடின தச்பிமத கைங்கர்யங்களையும் ஒழிவில் காலத்தின்படியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸம்பூர்ணமாக அநுஷ்டித்துக்கொண்டு ‘ஸஂஸாரவஷஹுவஹவவஹஉணவ’ என்னும்படி ஸர்வதா ஸந்துஷ்டராக எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீ அழகியசிங்கர் இப்படி ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்த காலக்ஷேபங்களை ஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கையில், ஸ்ரீ அஹோபில மடம் 41-வது

திவ்யாஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், ஸர்வ ஜனோஜ்ஜீவனார்த்தமாக ஸ்ரீ சிங்கவேழ் குன்றத் தெம்பெருமானோடு தக்ஷிண கங்கை என்று ப்ரஸித்தையான தாம்ர பர்ணீ தீரத்திலிருக்கும் அக்ரஹாரங்களில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும் ஸம யத்தில், சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவார்த்தமாக ஸ்ரீமுகம் நியமித்தருள, ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீ சிங்கவேழ்குன்றத் தெம்பெருமானையும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனையும் தண்டன் ஸமர்ப்பிக்கவேணு மென்கிற ஆஸ்தையினால் தாம்ரபர்ணீ தீரத்திற்கு எழுந்தருளி, சிங்கவேழ் குன்றத் தெம்பெருமானை மங்களாசாஸநம் செய்து, அவ்வெம்பெருமானுடைய திவ்யாஸ்தானத்தில் 'விஜ்ஞம் ஸகலம் ஆஶ்ரயே' என்கிறபடியே ஸகல ஸதா சார்ய லக்ஷணங்களோடும் ஜ்ஞாந ஶீல வயோ வார்த்தக்யங்களாகிற த்ரிவித வார்த்தக்யங்களோடும் ஶமதமாதி ஸகல கல்யாணகுணகணாலங்க்ருதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸந்நிதியில் ஸாஷ்டாங்கமாகத் தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, அம்மஹா தேசி கனும் ஏற்கெனவே பஹுமுகமாகக் கேட்டிருந்த அழகியசிங்கருடைய ஜ்ஞா நாநுஷ்டாந வைராக்யாதி குணங்களையெல்லாம் நேராகக் கண்டு, விஶேஷமாகத் திருவுள்ளம் உகந்து, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திவ்யாஸ்தானத்தில் ஆஸ்தாந வித்வானாக இருக்கவேணு மென்று நியமித்தருள, ஸ்ரீ அழகியசிங்கரும் 'தந் யோஸ்மி' என்று நியமநத்தைச் சிரஸா வஹித்து, அநேக ஸம்வத்ஸரங்கள் அம் மஹா தேசிகன் நியமநத்தின்பேரில் கூட எழுந்தருளியிருந்து, ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களையும் ஶததூஷணீ சண்டமாருதம் முதலிய வாத க்ரந்தங்களையும் அநேகம் ஸச்சிஷ்யர்களுக்குச் சிந்தநாரூபமான காலக்ஷேபத்தைச் செய்வித்துக் கொண்டு ஆஸ்தாந வித்வானாக எழுந்தருளியிருந்தார்.

பிறகு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திவ்ய தேசங்களெல்லாம் மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு, திருமேனியின் தளர்ச்சியினாலே ஸஞ்சாராஶக்தராய்த் தமது திருமேனி வியோகம், தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கத் திருப்பதியில் ஸம்பவிக்கவேணு மென்கிற திருவுள்ளத்தினாலே தமது திருவாராதநத் தெம்பெருமானான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஆஸ்தாந நிர்வாஹங்களையெல்லாம் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ தஶாவ தாரப் பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியிருந்து நடத்திக்கொண்டிருந்த காலத்தில், தமது திருமேனியில் அதிகத் தளர்ச்சினாலே அதிஶங்கை உண்டாகி 'தமக்குப் பிறகு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திவ்யாஸ்தாந நிர்வாஹ விஷயத் தில் ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸ்ரீ அழகிய சிங்கரே ஸமர்த்தர்' என்று தீர்மானித்து, ஸமீபத்திலிருந்த லௌகிக வைதிகர்களான ஸந்நிதி சிஷ்யர்களுடன் ஆலோ சித்த ஸமயத்தில், அவர்கள் எல்லோரும் ஸ்ரீ அழகியசிங்கருடைய தீர்மானத் தையே ஆமோதநம் பண்ண, அப்பொழுதே அம்மஹா தேசிகன் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஶாஸ்த்ரோக்த க்ரமமாக ஸந்யாஸத்தைச் செய்வித்து, தமக்குப் பிறகு ஸ்ரீ அழகியசிங்கரை ஷஷ்டி ஆஸ்தாந ஸகல நிர்வாஹங்களையும் செய்யும்படி நியமித்தருளினர்.

பிறகு அம்மஹாதேசிகனுக்குத் திருமேனி அநுகூலமாகிவிடவே, தமது திருமேனி வியோக பர்யந்தம் அவ்விடத்திலேயே எழுந்தருளியிருந்த இரண்டு அழகியசிங்கர்களும் ஏகாபிப்ராயர்களாக ஷ ஆஸ்தாந நிர்வாஹங்களைச் செய்தருளினார்கள். பிறகு அம்மஹாதேசிகன் நித்யவிபூதிக்கு எழுந்தருளின பிறகு, ஸ்ரீ அழகியசிங்கரே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஸகல கைங்கர்யங்களையும் குறைவின்றி நடத்திவருவதோடு, அச்ருத த்ருஷ்டபூர்வங்களாய் அதிமஹத்தரங்களான பஹுப்ரகார கைங்கர்யங்களாலும் அநிதரஸாதாரணங்களான ஜ்ஞாந அநுஷ்டாந வைராக்யாதி மஹத்தர மஹிமைகளாலும், 'தக்ஷவாதகோடீரஸௌஹம் வம்யேந ஸஞ்சயத்நவிஹவாநு' என்கிறபடியே பூர்வோத்தராசார்ய ரத்நமாலையின் உபய பார்ச்வங்களுக்கும் அதிசயாதாயகமான நாயக ரத்நம்போல எழுந்தருளி யிருப்பதைக் 'கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக் கினியன கண்டோம்' என்கிறபடியே கண்ணாரக் கண்டு களித்த நாம், இவ்வழகியசிங்கர் இக்கைங்கர்ய ஸம்பதபிவ்ருத்தியோடு பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு எழுந்தருளி யிருக்கும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்கிறோம்.

ஶ்ரீரங்கேஶய தீர்த்தாநாம் ஸஹஸ்ராணாம் ஸுரக்ஷகே ததா ।
ஶ்ரீநிவாஸாய தீக்ஷா ஸந்த்ருஷ்டிராயுர் ஸமவிந்ததா ॥

ஶ்ரீ:

ஶ்ரீமதே ஶ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீமதே ஶ்ரீ வண்சடகோப ஶ்ரீ ஶ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ அழகியசிங்கரின் க்ஷமா குணம்

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

'க்ஷமா' என்கிற சப்தம் ஸஹநத்தைப் பொருளாகவுடைய 'க்ஷமூ' என்கிற தாதுவினால் உண்டாகிறது; ஆகையினால் பொறுமையை அர்த்தமாக வுடையது. பொறுமையாவது பிறரால் உண்டான துக்கத்தை அநுபவிக்கும்போதும், அவர்கள் விஷயத்தில் ஹிம்ஸைக்குக் காரணமான கோப மில்லாதிருக்கை [கீ-16-அத்-பாஷ்யம்]; இது, பந்து வியோகம் வ்யாதி இவைகளால் உண்டான துக்க மிருக்கும்போதும், அழுகை புலம்பல் தெய்வநிந்தை இவைகளுக்குக் காரணமான மநோவிகாரம் இல்லாதிருப்பதற்கும், அதிகமான ஸுகங்க ளிருக்கும்போதும், அந்யர்களுடைய அவமாந ஹேதுவான கர்வ மென்கிற மநோவிகார மில்லாமைக்கும் உபலக்ஷணம்.

துக்க காரணம்:—முன் ஜந்மங்களில் செய்த பாபங்களும், தன்னுடைய அவிவேகமும், பிறருடைய அவிவேகமும், முடியாத கார்யங்களைச் செய்வதும், துக்க காரணங்கள். அவற்றுள்: 'க்லேஶிதாயே த்ரிவித்ராஸ் விரக்தவாவ்யாயி

दातव्या । [illegible] कृतं च तत्' என்கிற பாரத வசநத்தின்படியே, தாழ்ந்த ஜந்மம் தாரித்ர்யம் வ்யாதி விரூபமான தேஹம் இவைகளினு லுண்டாகிற துக்கங்களும், மற்றும் பந்து வியோகம் முதலிய துக்கங்களும், பூர்வ ஜந்மங்களில் செய்யப்பட்ட பாப கர்மங்களின் பயனாக உண்டாகின்றன. தன்னுடைய அவிவேகத்தினுல் பிறருடைய ஐச்வர்யத்தையும் நல்ல குணங்களையும் பார்த்துத் துக்க முண்டாகிறது. பிறருடைய அவிவேக மூலகங்களான நிந்தை ஹிம்ஸைகளினுல் பிறருக்குத் துக்க முண்டாகிறது. முடியாத தர்மங்கள் முதலிய கார்யங்களைச் செய்வதினுலும் துக்க முண்டாகிறது. இவற்றுள் பந்து வியோகம் வ்யாதி முதலிய துக்கங்கள் 'நான் என்கிற ஆத்மா தேஹத்தைக்காட்டிலும் வேறுபட்டவன்; நித்யன்; ஈச்வரனுக்கு சேஷபூதன்; பராதீநன்; தன்னுல் முன் ஜந்மங்களில் செய்யப்பட்ட புண்ய பாபங்களுக்கு அநுகுணமாக ஈச்வரனுல் கொடுக்கப்பட்ட ஸுக துக்கங்களை அநுபவிக்கிறுன்' என்கிற சாஸ்த்ரார்த்தத்தில் தெளிவோடு கூடிய நம்பிக்கையினுல் பொறுக்கப்படுகின்றன. ஒருவன் ஐச்வர்யம் நற்குணங்களோடு இருப்பதற்குக் காரணம், 'ये अतीव [illegible] नीरोगा रूपसम्पन्नाः [illegible] कृतं च तत्॥' என்கிறபடியே அவன் முன்பு செய்த புண்ய கர்மமே. 'நாம் அப்படிப்பட்ட புண்ய கர்மங்களை முன்பு செய்யவில்லை; ஆகையினுல் அவனுக்கு ஸமாநமான ஐச்வர்யமும் நற்குணங்களும் நமக்கு இல்லையே என்று துக்கிப்பது உசிதமல்ல' என்கிற விவேகத்தினுல் பிறருடைய ஐச்வர்யம் நற்குணங்களைப் பார்த்து உண்டான துக்கம் பொறுக்கப்படுகிறது. இப்படி விவேகமுடைய மநுஷ்யன் விஷயத்தில் விவேக மில்லாத பிறரால் செய்யப்படும் தூஷணங்கள் தேஹத்தைப்பற்றினவைகளானுல், அந்தத் தூஷணங்களுக்குத் தேஹத்தைக்காட்டிலும் வேறுபட்டவனுன ஆத்மாவினிடத்தில் ஸம்பந்த மில்லாததினுல் மனதில் வருத்த முண்டாக ஹேது வில்லாததினுலும், ஷை தூஷணங்கள் ஆத்ம விஷயங்களானுல் 'தூஷிக்கிற மனிதன் தூஷிக்கப்படுகிறவனுடைய பாபங்களையெல்லாம் வாங்கிக்கொள்கிறுன்' என்கிற சாஸ்த்ரார்த்தத்தில் நம்பிக்கையினுல் நம்மைப் பிறர் தூஷிப்பதினுல் நாம் நரகம் புகவேண்டாதபடி அது அநுகூலமாகிறது என்கிற நிச்சயத்தினுல், தூஷிக்கிறவனிடத்திலும் மனதில் வருத்த முண்டாக ஹேது வில்லை. ஆகவே: பிறருடைய அவிவேகத்தினுல் உண்டாகும் துக்கமும் பொறுக்கப்படுகிறது. தர்மாநுஷ்டாநங்களினு லுண்டாகும் துக்கமும் தர்ம பலமான பேரின்பத்தில் ஆஸ்தையினுல் பொறுக்கப்படுகிறது. ஆகையினுல் ஆத்ம ஜ்ஞாந முள்ள விவேகிகளினுல் ஸர்வவித துக்கங்களும் பொறுக்கப்படுகின்றன. இவ்விஷயத்தை, பிதாவான சக்தி மஹர்ஷியை ஒரு ராக்ஷஸன் கொன்றுவிட்டதற்காக ராக்ஷஸ யாகம் பண்ணின பராசரரைப் பார்த்து வஸிஷ்ட பகவான்,

"मूढानामेव भवति क्रोधो ज्ञानवतां कुतः।
अलमत्यन्तकोपेन तात मन्युमिमं जहि॥
स्वर्गापवर्गव्यासेधकारणं परमर्षयः।

வர்ஜயந்தி ஸதா க்ரோத⁴ம் தாத மா தத்³வஶோ ப⁴வ ||
க்ஷமாஸாரா ஹி ஸாத⁴வ: ||.”

என்று உபதேசித்த (விஷ்ணு புராண) வாக்யங்களினுல் அறியலாம். இந்தப் பொறுமையானது ப்ராஹ்மணனுக்கு ஸ்வபாவ குணம் என்பதை ‘ஶமோ த³மஸ்தப: ஶௌசம் க்ஷாந்திரார்ஜவமேவ ச | ஜ்ஞாநம் விஜ்ஞாநமாஸ்திக்யம் ப்³ரஹ்மகர்ம ஸ்வபா⁴வஜம்’ || என்னும் பகவத் கீதா வாக்யத்தாலும், ‘ஶமோ த³மஸ்தப: ஶௌசம் ஸந்தோஷ: க்ஷாந்திரார்ஜவம் | மத்³ப⁴க்திஶ்ச த³யா ஸத்யம் ப்³ரஹ்மப்ரக்ருதயஸ்த்விமா: ||’ என்னும் உத்தவ கீதையாலும், ‘ஸத்யம் தா³நமதா²த்³ரோஹ ஆந்ருஶம்ஸ்யம் க்ஷமா க்⁴ருணா | தபஶ்ச த்³ருஶ்யதே யத்ர ஸ ப்³ராஹ்மண இதி ஸ்ம்ருத: ||’ என்னும் மறையால் ஶாந்தி பர்வத்தாலும், மற்றும் ஸநத்ஸுஜாதியாதிகளாலும் அறியலாம். அப்படியானுல், கீதை 16-ம் அத்யாயத்தில் தாத்பர்ய சந்த்ரிகையில் ‘ப்³ராஹ்மணா ஹ்யதிகா வைவஸ்வதா: ஶாபயோஶ்ச க்ருத்³தா⁴: | ப்ரஸாதே³ க்ரோதே⁴ ச க்ஷமாவத்த்வம் ந தத்ர காரணம்’ என்று அருளிச்செய்திருப்பது விருத்தமாகாதோ என்கிற ஶங்கை, அவ்விடத்திலேயே ‘அக்ரோத⁴:’ என்றும் ‘க்ஷமா’ என்றும் வேருகச் சொல்லியிருப்பதால் உண்டாகாது. ஸஹேத க்ரோதா⁴ஹவ வ்யாவத்யம் க்ஷமாத்வம். அப்படியே ‘நாஹம் க்ஷமாவாந் ப்³ரஹ்மர்ஷே ந அஹம் ஶமம் ஹ்ருதே க்ஷமா | அக்ஷாந்திஸாரஸர்வஸ்வம் ப்³ரஹ்ம ஸம்ப⁴வமேவ ஹி மாம்’ என்கிற ச்லோகத்தில் துர்வாஸாவிடத்தில் பொறுமையில்லை யென்று சொன்னது, ஸம்ஹார்த்தாவான ருத்ரனுக்குப் புத்ரனை தன் ஸ்வபாவத்தைச் சொன்னபடி; ஆகையினுல் விருத்த மன்று. இந்தப் பொறுமைக் குணமானது இந்த லோகத்தில் மனிதர்களுக்குப் பலவிதமான நன்மைகளைக் கொடுப்பதோடு, பரலோகத்திலும் ஸகல புண்ய கர்மங்களினுல் அடையக்கூடிய பேரின்பங்களைக் கொடுக்கு மென்று பாரதத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

போறுமையின் தாரதம்யம் :—இப்படி, ஶாஸ்த்ரங்களில் உயர்ந்த குணமாகக் கொண்டாடப்பட்ட பொறுமையானது பல விடங்களில் ஏறவும் சுருங்கவு மிருப்பதைத் தெரிவிக்கிறேம். ஸகல கல்யாண குணங்களையுடைய ஸர்வேச்வரன் ‘க்ருதாக³ஸ: க்ஷமாஸ்தி கேஶவ: ஶ்ரீதா³நு’ என்கிறபடியே தன்னைத் தேடிவந்து ஶரண மடைந்து தமது குற்றங்களைப் பொறுத்தருளவேணு மென்று ப்ரார்த்தித்தவர்களுடைய குற்றங்களை மாத்ரம் பொறுத்தருள்வதால் அவனுடைய பொறுமை மிகவும் சிறியதாகிறது. மஹாலக்ஷ்மீயானவள் ‘அகிஞ்சநாந் ஸ்வாநு கு³ணாந் கடாக்ஷயேத்’ என்கிறபடியே அபராதம் பண்ணினவர்கள் தன்னை ஶரணமாக வந்தடையாவிட்டாலும், அவர்கள் கதியற்று நிற்கிறதைக் கண்ட மாத்ரத்திலேயே அஜ்ஞாத நிக்ரஹையாய், அவர்களுடைய குற்றங்களை யெல்லாம் பொறுத்து அவர்களை ரக்ஷித்தருள்வதால், அவளுடைய பொறுமை ஸர்வேச்வரனுடைய பொறுமையைக் காட்டிலும் பெரியதாகிறது. பூமிதேவியானவள், ‘ந ச ப்ரவிஜ்ஞாய ப்ரத்யேயமீதி யக்ஷமாம் ஸ்வபா⁴வேநாபி ஸஹிஷ்ணுதாம்’ என்கிறபடியே ஸம்ஸாரிகளுடைய அபராதங்களையே அறியாவளாக இருப்பதால், அவளுடைய பொறுமை மஹாலக்ஷ்மியினுடைய பொறுமையைக் காட்டிலும் பெரியதாகிறது.‘உபேக்ஷிஸ்ய’

என்றும், 'காரேய் கருணை யிராமானுசன்' என்றும் ப்ரஸித்தரான ஸ்ரீ பகவத் ராமாநுஜன், அளவிறந்த தயையினாலே ஸகல ஸம்ஸாரிகளுடைய உஜ்ஜீவநத்தையே முக்யமாக நினைத்து, அவர்களுடைய அபராதங்களை யெல்லாம் பொறுத்து, அதிரஹஸ்யமான த்வயார்த்தத்தைத் தாமாகவே பெரிய ஒலக்கத்தில் உபதேதித்து, அதனால் '[Grantha text]' என்றும், '[Grantha text]' என்றும் விதிகளை அதிலங்கநம் பண்ணினதினாலும், ஆசார்ய நியமநாதிலங்கநத்தினாலும், தமக்கு உண்டாகக்கூடிய தோஷங்களின் பலன்களையும் பொறுத்தும், பரோபகாரார்த்தமாகவே கள்ளியுணங்கும் கடிய வெங்கானிடை தேசங்களெல்லாம் பொன்னடி நோவ நடந்து பிக்ஷாஜீவநம் பண்ணிப் பலபல துக்கங்களைப் பொறுத்திருந்ததினாலும் அம்மஹா புருஷனுடைய பொறுமை பூமிதேவியின் பொறுமையிலும் பெரியதாகிறது. பரிபவத்தைப் பொறுக்கும் விஷயத்தில் பரிபவார்த்தமாகத் தமது தலையின் கீழ் வைத்த பாதரக்ஷையைப் பூஷணமாகப் பாவித்து '[Grantha text]' என்கிறபடியே பராவமாநத்தை அம்ருதமாக உகந்து '[Grantha text]' என்று பரிபவத்தைப் பெருமையாகப் பூஜித்திருந்த ஸ்ரீ நிகமாந்தமஹா தேசிகனுடைய பொறுமை அதிலும் பெரியதாகும்.

ஸ்ரீ அழகியசிங்கரின் பொறுமை:— ஸ்ரீ அழகியசிங்கர் அதி பால்யாவஸ்தையிலும்கூட பூர்வ ஜந்ம க்ருத ஸுக்ருத விசேஷவாஸனையினால் பாஹிம்ஸா ஹேதுவான கோபலேச ஸம்பவ மில்லாததோடு, பராவிவேக மூலமான கோப வேகங்களையும் பொறுத்திருந்ததாக ப்ரஸித்தி யிருப்பதாலும், பிறகு, '[Grantha text]' என்கிறபடியே அதிக க்லேசாநுபவ மாத்ர ப்ரயோஜநமான சுஷ்க தர்க்க வ்யாகரணாத்யயநத்தை இக்காலாநுகுணமாக அநாதரித்திருக்க வேண்டியதே உசிதமாக இருந்தும்,

'[Grantha text] ।
[Grantha text] ॥
[Grantha text] ।
[Grantha text] ॥
[Grantha text] ।
[Grantha text] ॥'

என்று ஸர்வோத்க்ருஷ்ட புண்யமாகச் சொல்லப்படுகிற வித்யா ப்ரதாந ரூபமான பரோபகாரத்தில் ஆஸ்தாதிசயத்தினாலே தர்க்க வ்யாகரணாதி சாஸ்த்ராத்யயநத்தில் ப்ரவ்ருத்தி உண்டாகி, அதற்காகக் காசி முதலான தூர தேசவாஸ க்லேசங்களையும், தந்மூலகமான அதிதுஸ்ஸஹ சீதோஷ்ணாதி துக்கங்களையும், அந்தக் காலத்திலும் அதி விசுத்தாஹார ஸேவந ச்ரத்தாதிசயத்தினாலே சரீர

ஸம்ரக்ஷணநுகூல ஸாரதம ஸமீசீநாஹார ப்ரஸக்தியில்லாமல், அதி நியத காலி காநிந்த்ரியோந்மாதகாஸாராஹார ஸேவநத்தோடு அஹோராத்ர ஶாஸ்த்ராப்யாஸ ச்ரமத்தை ஸஹித்திருந்ததாலும், பிறகு யௌவநாவஸ்தையிலும், ஆவிநிலைக்க ஐவர் குமைக்கும் சப்தாதிகளான சிற்றின்பங்களை அநுபவித்து ஸந்தோஷித்திருக்கும் லௌகிகர்களைப்போ லன்றிக்கே அவ்விஷயாநுபவங்களில்,

‘இக்ஷ்வாகூணாமயம் ஹி ஸ்வயோசிதந்த்ரணாம் | வ்ருத்தேஷு ஸ்வஸுதாந் ராஜ்யே ஸ்தாப்ய வநம் விஶாம்பதே’ ‘ராஜா ஸர்வகுணைர்யுக்தோ ஜ்யேஷ்டம் புத்ரம் ஸுதாராஜ்யே ஸம்ஸ்தாப்ய ததோ வநம் ஸ்ரீ திஷ்டந்தி ராமாந்தவநாதிபா:’ ‘கிம் தஸ்ய கிம் யஸ்ய ந ஜீர்ணைர் வஸநைர் த்ரு ஹேமாத்ரேஸ்ஸ்த்ரவாவிர்யை: | ஸகலாஹா ஸமஸ்தஸ்ய ஸர்வஜ்ஞஸ்த்ராஸ்வவஸாநபயாத!’ ‘நாவ்யக்ஷஸ்வயதேநம் காலோ வா ஸததம் ஸஹிதே: ஸ்வஸ்தம் நீயதாநஸ்ய வயஸ்யேவ ந தஷ்டித: |’ ‘யாவத: குருதே ஜந்து: ஸம்பந்தாந் மநஸ: ப்ரியாந் | தாவந்தோஸ்ய நிகந்யந்தே ஹ்ருதயே ஶோகஶங்கவ: ||’ ‘ஸுஶிக்ஷயேவ நஸ: ஸ்யாயோ யோகஸ்த்வம் அத்யேதி | ஸ்ரோத்ரேந்த்ரியஜந்யகோ வக்தாஸ்வத திஸ்வரஹா’, ‘விஷஸ்ய விஷயாணாம் ச தூரமத்யந்தமந்தரம் | உபபுக்தம் விஷம் ஹந்தி விஷயா: ஸ்மரணாதபி ||’

என்கிறபடியே விசேஷ தோஷ தர்ஶநத்தினலே அவ்விஷயாநுபவங்களை ‘உண்டியே உடையே உகந்தோடுமிம் மண்டலத்தொடும் கூடுவ தில்லையான்’, ‘மாரனார் வரிவெஞ்சிலைக் காட்செய்யும் பாரினரோடும் கூடுவ தில்லையான்’ என்றும், ‘ஸர்வம் து:கம் விவேகிந:’ என்றும் சொல்லுகிறபடியே, ததநுபந்தி பர்யந்தமாகப் பரித்யஜித்து, அந்த யௌவநாவஸ்தையில் ‘நிவிஷ்டம் யதிஸார்வபௌம ஸவயஸ்ஸாஸ்த்ரியயௌவநம்’ என்றும், ‘யதீஸ்வரஸரஸ்வதீஸுரபிதாஸயா:’ என்றும் ‘ஸ்ரீமத்ராமாநுஜாஸ்ரிதஸர்வஜநாஸ்ரய:’ என்றும் சொல்லுகிற படியே, பும்ஸாம் திருஷ்டி சித்தாபஹாரியான ராம ஸௌந்தர்யம்போலே புத்திமான்களுடைய புத்தி சக்திக்கு ஆகர்ஷகமாய், மூஷித ஶஜநா மாஸிகா மாஸ்ய ஸ்ரீமாதிநந்நமான யதீச்வர ஸரஸ்வதீ விவித ரஸாஸ்வாத வ்யாமுக்த சித்தராய், ஸ்ரீ பாஷ்யகாரரால் நியமிக்கப்பட்ட ப்ரதம கைங்கர்யமான ஸ்ரீ பாஷ்யோபதேச விஷயத்தில் ஸந்யஸ்த ஸகல க்ருத்யராய், அத்யந்த துஸ்ஸஹங்களான மநோவாக் ஶரீர க்லேசங்களை அதிபோக்யமாக ஸஹித்திருக்கையாலும், பிறகு வார்த்தகாவஸ்தையிலும், ‘அழகியான்தானே வரியுருவன் தானே’ என்கிறபடியே அல்ல லின்பம் அளவிறந்த தெங்கு மழகமர் சூழொளியனைய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய நித்ய திருவாராதநாதி நித்ய கைங்கர்யங்களில் அளவிறந்த ஆஸ்தா விசேஷத்தினலும், ‘ஸர்வஶக்தே ஹரவா நஸேஷஸம்ஹாரம் ஹரிரவஜந ஜநாதிகாம் ஸஜ்ஜநத’ என்கிறபடியே அதிவிஶால அத்யுதார மநோபாவத்தினல் ஸகல மநுஷ்யோஜ்ஜீவநத்தில் அதிக ஆஸ்தையினலும், தமது வார்த்தக்யாவஸ்தாநுகுணமாய் ஐஹிக ஸகல ஸாதகங்களுக்கு ஸாதகமாய், முன்பே ஸித்தமாய் ஸர்வோத்க்ருஷ்டாச்ரம மென்று ஶாஸ்த்ரங்களினல் கொண்டாடப்பட்ட க்ருஹஸ்தாச்ரமத்தைப் பரித்யஜித்து, அஶக்தர்களால் அநுஷ்டிக்க முடியாத

அநேக தர்மங்களை யுடையதாய், அபரிஹார்யங்களான ஆஹார வஸ்த்ராதிகளி லும் அத்யந்த பராதீநமாய், 'யமெெநஉவஉநெ்தூாநு வநெ ஷததஜெவ ஹி। தயாவூ தஜ்ஹெஅூஹ: ஷதாமயச்ூா நக—கிஷயநு' என்கிறபடியே பராவமாநங் களுக்கு ப்ரதாந பாத்ரமாக இருக்கவேண்டியதாய், புநஸ்ஸங்யா ஸாநர்ஹமான ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து அவ்வாச்ரம தர்மாநுஷ் டாந க்லேசங்களை அத்யந்த போக்யமாக ஸஹித்திருக்கையாலும், 'வரித்ராணாய' என்றும், 'ஜமதாஉ—வகாராய' என்றும் சொல்லு கிறபடி, ஸகல ஸம்ஸாரிகளுடைய ஸம்ரக்ஷணார்த்தமாக நாட்டில் பிறந்து மனிசர்க்காய்ப் படாதன பட்ட ஸர்வேச்வரன் ஸம்ஸாரிகளிடத்தில் காருண்யத் தினாலே நெடுங்காலம் காத்திருந்தும் ஸம்ஸாரிகளில் ஒருவரும் வந்து ஆச்ரயிக் காததினாலே, 'சவூாவ; ஊாமிவதஃஜெ ஊததூ—ஷமஷாஈவதஃமி' என்றும், நெஞ்சாறல் பட்டுத் திரும்பிப்போன குறையைத் தீர்க்கவேணு மென்கிற திருவுள்ளத்தினால், 'கூ தாமஷ: க்ஷாஉூதி கெமவ: ஸ்ரீதாநு' என்கிறபடியே தாமிருக்கு மிடம் தேடி வந்து சாஸ்த்ரப்படி தன்னை சரணமாக அடைந்த ஸம் ஸாரி சேதநர்களுடைய அபராதங்களை மாத்ரம் பொறுத்தருள்கிற தென்கிற அவ்வெம்பெருமான் ஸங்கல்பத்தை மாற்றி, 'ஷதிம த—ஹமவா நமெஷவ—ம ஷாம ஹரிமவஜநூஜஈாதிகாம ஷஜஜிழ' என்கிறபடியே அதி விசாலோதார மான தமது திருவுள்ளத்திற்கு அநுகுணமான அவன் பாதமா மலர் சூடும் பத்தியில்லாத பாவிக ளிருக்கு மிட மெங்கும் அவன் தானே எழுந்தருளும்படி ப்ரார்த்தித்து அவ்வெம்பெருமானுடைய விவித விசித்ராநந்த விபூதிகளோடு அவனையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, கடிய வெங்கானிடை யெல்லாம் காலடி நோவ நடந்து, அவ்விபூதி ஸம்ரக்ஷண க்லேசங்களை யெல்லாம் பொறுத்து, பொய்யே கைம்மை சொல்லிப் புறமேபுறமே யாடிப் பல பகலும் பழுதே போக்கி நிற்கும் ஸம்ஸாரி சேதநர்க ளிருக்கு மிடங்களுக்குத் தாமே போய் நின்று, அந்த ஸாபராத ஸம்ஸாரி சேதநர்களுடைய அப்ரதிஷேத மாத் ரத்தையே முக்யோபாயமாகக் கொண்டு, அவர்களுடைய அநந்தாபராதங் களையும் அவ்வெம்பெருமான் பொறுத்தருளும்படி அவர்களுக்காகத் தாமே அவ்வெம்பெருமான் திருமுன்பே ஸாஞ்ஜலிபந்தராய் அவன் திருப்புகழ்கள் பலவும் பாடி, ஆராத மனக்களிப்போ டழுத கண்ணீர் மழை சோர வன்புருகி எத்தி நின்று, அந்த ஸம்ஸாரிகளுடைய அபராதங்களை யெல்லாம் பொறுத்து அவர்களை ரக்ஷித்தருளும்படி நாடோறும் ப்ரார்த்திக்கும் பஹு—விதங்களான க்லேசங்களை யெல்லாம் பொறுத்திருப்பதையே புருஷார்த்தமாகப் பாவித் திருப்பதாலும், முற்காலத்தில் சில நாள்களில் த்ரைலோக்யாதிபத்யம் பெற் றிருந்த நஹு—ஷ மஹாராஜன் தன்னறிவின் குறைவினால் ஐச்வர்யப் பேரின்ப விஷயத்தில் பொறுமை யில்லாததினால், தான் செய்ததோர் பெரிய பாவத்தை, 'ஷ—வூாஜூஊவிமெஅதூஅாஊஜிமெஃாஹயதெநாழ। வதஃஊாநஹு—வெஷவெஃா ஊ—ஹூதீதி ஊதீஊஉ॥' என்கிறபடியே அறிவில்லாத பெருஞ் செல்வத்தின் தலை யில் அச்செல்வம் செய்வித்ததாகப் பழிசுமத்தினன். நம் ஸ்ரீ அழகிய சிங்கரோ வென்றால், 'இவ்வுலகத் தெல்லா மறிவீர்' என்கிறபடியே ஸர்வஜ்ஞரா யிருக் கையாலே 'கண்ணபுர மொன்றுடையானுக் கடியேன்' என்கிறபடியே

பரமசேஷதைக ரஸமான ஸ்வாத்ம ஸ்வரூபத்திலும் ‘[illegible]’ என்கிறபடி மமகார மற்று, ‘உற்றது முன்னடியார்க் கடிமை’ என்கிறபடியே ததீய சேஷத்வ பர்யந்தமாக நிஷ்டை பெற்றிருப்பதால், ‘ராஜாதிராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுர் ப்ரஹ்மமயோ மஹாந்’ என்கிறபடியே பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற மாலோலனுடைய மஹா விபூதிகளின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திக ளெல்லாம் தமது ஸங்கல்பாதீநமாக இருக்கச்செய்தேயும், ‘[illegible]’ என்கிறபடியே அந்த மஹா விபூதி விஷயத்தில் ஸம்பந்த லேச வாஸநா விஹீநராய் எழுந்தருளியிருக்கையினாலே கீழே சொல்லப்பட்ட க்லேசங்களை யெல்லாம் பொறுத்திருப்பது போலே பூர்ணமான ஐச்வர்யாநுபவத்திலும் அருமையான பொறுமையோடு எழுந்தருளியிருக்கையாலும், இப்பொறுமைக ளெல்லாம் ஒரு புறம் இருக்க, ‘நன்மை தீமைக ளொன்று மறியேன்’ என்கிறபடி, குணதோஷ விபாக மறியாத அடியேனுடைய பொறுக்கமுடியாத இந்த ஈனச் சொற்களையும் அநாதரித்து விடாதே கேட்டுப் பொறுமையோடு எழுந்தருளியிருக்கையாலும், ஸ்ரீ அழகிய சிங்கருடைய பொறுமையே மற்றெல்லாப் பொறுமைகளைக் காட்டிலும் மேலானதாக விளங்குகிறது.

[illegible] ।
ஸ்ரீநிவாஸாய [illegible] ॥

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(எட்டாம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி]

அபிநிவேசன் :—[சுற்றிலும் கண்களைச் செலுத்திப் பயத்துடன்] ஆகாயமெங்கும் கோரமான அபசகுநங்கள் காண்கின்றன. வாசல் தூண் நுனிகளில் கழுகுகள் கூட்டமாய்ச் சூழ்ந்துள்ளன. [பத்தாவது அங்கத்தில் ஜீவனுக்கு மோக்ஷம் கிடைத்து விவேக ராஜருக்கு ஜயம் வரும்பொழுது கருடன் வட்டமிடுவது கூறப்படப் போகிறது. இங்கே இவர்களுக்குக் கழுகுகள் வட்டம்.] நம் ஸேனைகளின் கொடிக ளெல்லாம் புயல் காற்றால் ஒடிக்கப்பட்டு விழுந்து சூந்யமா யிருக்கின்றன. [வேணீ ஸம்ஹார நாடகத்தின் இரண்டாவது அங்கத்தில் துர்யோதநனுடைய ரத த்வஜம் பீமமான பெருங்காற்றினால் முறிந்தது அபசகுநமாகக் காட்டப்பட்டது. கரனுக்கும் ராவணனுக்கும் இப்படியே அபசகுநங்கள்.] இங்கே நடக்கப்போகும் விவேக மஹாமோஹ யுத்தமும் ராம ராவண யுத்தம் போன்றது. சூலம் கத்தி உலக்கை வில் முதலிய க்ரூர ஆயுதங்களும் பயங்கரரான யம கிங்கர ரூபங்களும் காணப்படுகின்றன.

[இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் நாரதர் ஆகாயத்திலிருந்து இறங்குவதைப் அபிநிவேசன் பார்க்கிருன்.]

இதென்ன கஷ்ட காலம்! பற்றில்லாத நிவ்ருத்தி தர்மமே வடிவெடுத்தவரென்ற ப்ரக்யாதியையுடைய நாரத ரென்னும் தேவர்ஷியும் தும்புருவும் நம் ராஜாவின் விரோதிகளான சாரர்கள். மூன்று லோகங்களாகிய ஸம்ஸார சுரங்கத்தில் நாரதர் விதூஷகர் போன்றவர். வெள்ளைக் காக்காய்போல் இவர் நம் ராஜதாநியில் புகுகிருர். [ஒன்பதாவது அங்கத்தில் விவேக ராஜர் நாரதரை ஒரே வெண்மையான தேஜஸ்ஸென்று வர்ணிக்கிருர்.] நாரதருக்குக் கலஹப்ரியத்வமே ஸ்வபாவம். எங்கள் ராஜா மஹாமோஹர் எளிதில் ஏமாந்து போகிறவர். விதி என்ன செய்யப்போகிறதோ அறியேன். வருவது வந்தே தீரும். ஐயோ! மஹா மோஹருடைய வீர லக்ஷ்மிக்கு ஸம்ஶயம் வந்துவிட்டது.

"ஆகாய மெல்லாம் குடைகளால் மறையவேணும். திக்குக்க ளெல்லாம் சாமரங்கள் வீசவேணும். ப்ரளய காலத்தில் அலைக்கும் அலை கடல்கள்போல் பேரீ முதலிய யுத்த மேளங்கள் கொட்டவேணும். திக்பாலர்க ளெல்லாம் மின்னல் கொடிகள்போல் மின்னும் தங்கப் பிரம்புகளால் விரட்டப்படவேணும். மஹாமோஹரே யுத்த ஸந்நாஹத்துடன் படைக்களம் வருகிருர்."
[திரைக்குள்ளிருந்து இப்பொருள் அடங்கிய ச்லோகம் சப்திக்கப்படுகிறது.]

அபிநிவேசன்:—[கர்து கொடுத்து] இதென்ன! மஹா மோஹரே நேரில் யுத்தத்திற்கு விஜயம் செய்கிருர். [பயத்துடனும் துக்கத்துடனும்] ப்ரியே! பெரும் ஆபத் ஸமயம்.

"அத்₃ய ஶ்வோ வா நூநம் நியதிர் வேத₄ஸோ வாக்।
அமோஹமவிவேகம் வா ஜக₃தே₃தத்₃ த்₃ரக்ஷ்யதி ॥"

இன்றைக்குள்ளோ நாளைக்குள்ளோ விதியின் வழியால் இந்த உலகம் மோஹ ராஜனையோ விவேக ராஜனையோ இழக்கப்போகிறது. உலகம் இருவரில் ஒருவரற்றதாக விடுவது திண்ணம். 'அராவணமராமம் வா ஜக₃த்₃ த்₃ரக்ஷ்யத₂ வாநரா:' என்பது (யுத்த காண்டத்தில்) ராமன் வார்த்தை. ராம ராவண யுத்தம் மூன்று திநங்களில் முடிந்தது. நாம் மிகவும் ஜாக்ரதையா யிருக்கவேண்டிய ஸமயம் இது. ஶமம் தமம் முதலியவர் விவேகர் படையில் முன்னணி வீரர்கள்; அதி தீரர்கள்; ஸம்ஸாரத்தையே அழிக்க வல்லவர். இன்ப விஷய போகங்களில் வெறுப்பை யுண்டாக்குமவர். அவர் ப்ரசாரத்தைத் தடுக்க, நாம் அவர்கள் ஸஞ்சரிக்கும் மார்க்கங்களில் அடிசோறும் இரும்பு முட்களை நட்டுவைக்கவேணும். [இப்படிப் பேசிக்கொண்டே பயந்து ஓடுகிருன்.] [இப்படிக்கு முன் அங்கத்திற்கும் பின் அங்கத்திற்கும் நடுவில், முன் கதையையும் பின் கதையும் தொடர்ச்சியாக்க, மத்தியில் நடந்ததைக் காட்டுவதற்காக அமைக்கும் ஸம்பாஷணைக்கு 'விஷ்கம்பகம்' என்று பெயர். பேசும் பாத்திரங்களில் ஸம்ஸ்க்ருதப் பேச்சும் ப்ராக்ருதப் பேச்சும் கலந்திருந்தால் அதற்கு 'மிச்ர

18125.

விஷ்கம்பகம்' என்று பெயர். இங்கே அபிநிவேசன் ஸம்ஸ்க்ருதமாயும் அவன் மனைவி துர்வாஸனை ப்ராக்ருதமாகவும் பேசுவதால், இதற்கு 'மிச்ர விஷ்கம் பகம்' என்று பெயர்.]

[பிறகு, மஹாமோஹனும் துர்மதி தேவியும் நாரத
முனிவரும் ப்ரவேசிக்கிறார்கள்.]

மஹாமோஹன் :—பகவானே ! ப்ரஹ்ம தேவருடைய அருமைப் புதல் வரும், ஈரேழு பதினான்கு லோகங்களிலும் சுற்றிக்கொண்டு ஆங்காங்குள்ள ஆச்சர்யங்களைக் கண்டு களிப்பவரும், எல்லா லோக பாலர்களுடைய கிரீடை மாலைகளால் அலங்கரிக்கப்பட்டவருமான தேவரீர் திருவடிகளால், மாயை, என்னுடைய ராஜதானீ அநுக்ரஹிக்கப்படுவதால் நாங்கள் தந்யர்க ளாக ஸம்வ்ருத்தர். [இங்கு 'ஸம்வ்ருத்தர்' என்னும் பதத்திற்கு 'ஆனோம்' 'முடிந்தோம்' என்னும் இரண்டு பொருள்களு முள்ளதால் அது அச்சான்ய மான சப்தம்.]

நாரதர் :—ராஜனே ! மற்றொருவருக்கு மில்லாத உம்முடைய ஆச்சர்யங் களை அநுபவிக்கும் பாக்யத்தைப் பெறும் நாங்களே தந்யர்கள். [மாயை என் னும பதத்திற்கு ஆச்சர்யம் என்ற பொருளுண்டு.]

மஹாமோஹன் :—இந்தத் தேவர்ஷிக்குப் பாத்யமும் அர்க்யமும் மது ப க்கமும் ஸமர்ப்பிக்கப்படவேண்டும்.

துர்மதி:—[வணக்கத்துடன் கிட்ட வந்து] பகவானே ! இதோ பாத்யம்; இதோ அர்க்யம் ; இதோ மதுபர்க்கம்.

நாரதர்:—[கையினால் வேண்டா மென்று ஸம்ஜ்ஞை செய்து] 'ஸம்வ்ருத்தா உபசாரா:' இதற்கு மூன்று பொருள்கள் கூடும். 1. உங்கள் ப்ரிய மான பேச்சினாலேயே எனக்கு உபசாரம் செய்தாய்விட்டது; ஆகையால் இவ்வுபசாரங்கள் செய்வது அதிகப்படி. 2. ஸம்வ்ருத்தோபசாரா:—உங்க ளிடம் நான் பூஜை பெறுவது எனக்கு ஸம்பத்து (நல்லது) அல்ல. 3 'ஸம்வ்ருத:' என்பதற்கு 'அழிந்தது' என்றும் பொருள். இன்றைக்கு எனக்கு உப வாஸ வ்ரதம். துளஸீ வநத்தில் த்வாதசியை அநுஷ்டிக்கும் வரையில் நான் ஒருவரிடமும் ஒன்றும் அங்கீகரிக்கலாகாது. 'அஸதாம் ச ப்ரதிக்ரஹ:' என்ற படி அஸத்துக்களிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்வது நிஷித்தம்.

மஹாமோஹன்:—பகவானே ! தேவரீர் ஸ்வபாவம் அத்யத்புதமாயும் அதி மநோஹரமாயும் மிருக்கிறது.

" ஜாஸ்யாந்விதா அபஸிதா ச மதிர்த்விதீயா
ஸேஜாங்க்வேநா பஹுகுணா ச விஹாதி வீணா ।
தேஹஸ்ய உபசயதி சா ந்ரு உவீசவிவர்த்யாம்
ஷ்ராவோஸி நத்வீஹ ஹோ மஹஸரஜிஹேதவ: ॥ "

உமது கதி, நர்த்தநம் கலந்ததாயும் மிக அழகாயும் இருக்கிறது. [ஆகாயத்தி லிருந்து இறங்கும்போது வீணையை மீட்டி வாசித்துக்கொண்டும், பகவத் குணங்களைப் பா ; க்கொண்டும், ஆநந்த நந்த்தநம் செய்துகொண்டும் நாரதர் வருவது யாதவாப்யுதயம் 15-வது ஸர்க்கத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. எப்பொழுதும் பகவத் குணங்களை நினைந்து நினைந்து ஆநந்த நர்த்தநம் செய்பவர் நடக்கையில் நர்த்தநமும் கலக்காம விராது. இவர் ஸஞ்சாரங்களில் நர்த்தநத் தின் அழகை நாட்ய ரஸிகனன மஹாமோஹன் புகழ்கிருன்.] இவர் நர்த்தநம் லாஸ்ய மென்னும் லளித நர்த்தநம்; பைரவமான தாண்டவ நர்த்தந மல்ல. திரு வடிகள் நர்த்தந ஸுந்தரம். கையில் வல்லகி யென்னும் வீணை. அதை மீட்டி வாசித்துக்கொண்டே இன்புறுகிருர். அதன் நாதம் மிகவும் இனியது. அந்த வீணை 'பஹுகுணம்' என்று வர்ணிப்பதில் ச்லேஷை. 'குணம்' என்பது வீணைத் தந்திகளுக்கும் பெயர்; அநேக தந்திகளையுடைய வீணை; மிகவும் உயர்ந்த குண முடைய வீணை. திருவடிகளையும் திருக்கைளிலுள்ள வீணையையும் வர்ணிக்கி ருன். வெண்மையான தேஜஸ்ஸால் ஜ்வலிக்கும் திருமேனியில் ஈடுபட்டு வர்ணிக் கிருன். தேஹமோ சந்த்ரிகையைப் போன்ற சோபையோடு ப்ரகாசிக்கிறது. 'வஹாஞ்ரிதா அா ஷ ஊவீஊவிவாூழ' என்று பார்வதியை வர்ணித்த காளிதாஸ ச்லோகத்தில்போல மஹாமோஹன் நாரதர் திருமேனி பரப்பும் சந்த்ரிகா சோபையில் ஈடுபடுகிருன். இந்த நாரத பரமஹம்ஸருடைய நடையும் ஹம்ஸ நடையாயிருக்கிறது; இவருடைய திருமேனியும் ஹம்ஸ தவளமா யிருக்கிறது; தேவரீரை ஸேவித்துக்கொள்ளுகையில் எங்களுக்கு ஹம்ஸ நடையோடு நர்த் தநம் செய்துகொண்டு வருவதுபோல மதுரமாக வீணையை மீட்டிப் பாடிக் கொண்டு சந்த்ரிகையைப் பரப்புவதுபோல லாவண்யத்தை வீசிக்கொண்டு வரும் பரம ஸுந்தரமான ஒரு போக்ய வ்யக்தியைக் காண்பதுபோல எங்க ளுக்குப் போக ரஸம் பெருகுகிறது. [அவர் பக்தி வைராக்ய மாநங்களி லிருந்து பக்தியையும் வைராக்யத்தையும் மஹாமோஹன் க்ரஹிப்பனே? அவ ருடைய ப்ரஹ்மாநுபவ மகிழ்ச்சியால் திருமேனி முழுவதிலும் ஜ்வலிக்கும் ப்ரஹ்மாநந்தம் இவன் கண்ணில் படாது. சுக பரமஹம்ஸருடைய கண்ணன் போன்ற அழகை முதல் ஸ்கந்தத்தின் முடிவில் அடுத்த ஸ்கந்தத்தில் பாகவத ப்ரவசநம் தொடங்கப்போகுமுன் ஸூதர் மிகவும் இன்பமாக வர்ணித்தார். அந்த ச்லோகங்கள் சததூஷணியின் 65-வது வாதத்தில் உதாஹரிக்கப்பட்டுள் ளன. சுகரை வர்ணித்ததுபோல இங்கே நாரதரின் வர்ணநம்.]

நாரதர்:—[தம் மனத்திற்குள்] விபரீத மோஹமயமான இம்மூடன் கண் உண்மைக்கு விரோதமாகவே விஷய ரஸமாகவே பார்க்கிறது. (ப்ரகாச மாக) மஹாராஜரே! நீர்தான் அத்யத்புத ரென்று சொல்லவேணும். நீர் சூழ்ந்த தாமரை யிலையைப்போல் சுற்றி யணைந்து சூழ்ந்திருக்கு மொன்றிலும் ஒட்டக்கூடாத பற்றற்ற ஸ்வபாவமான சுத்த ஜீவ ஸ்வரூபத்தையும் உம்முடைய மோஹ வலைகளில் சிக்கவைத்து விஷய போக ரஸங்களில் முழுகச் செய்கிறீரே! [அத்புத மென்று நாரதர் நடையழகு முதலியவற்றை மஹாமோஹன் வர்ணித் தான். சேராததைச் சேர்க்கும் சக்தியுள்ள மஹாமோஹனுடைய சக்திதான்

அத்யத்புதம் என்று நாரதர் கூறுகிறார்.] 'நீர்தான் அத்யத்புதர்' என்பது நாரதர் வார்த்தை.

[திரைக்குள்ளிருந்து]

ஓய் வாசல்காப்பாரே! விவேக மஹாராஜருடைய த்ருஷ்டப்ரத்யயன் என்னும் தூதனாகிய நான் வந்திருப்பதை உம் மஹாராஜரிடம் தெரிவிப்பீர்.

[வாசற்காப்போன் ப்ரவேசித்து அணுகி] தேவ! விவேகர் தூதன் வாசலிலே காத்து நிற்கிறான்.

மஹாமோஹர்:—உள்ளே வரச்சொல். [தூதன் வருகிறான்]

தூதன்:—[மோஹனுக்கு அருகில் நாரதர் இருப்பதைப் பார்த்துத் தன் மனதிற்குள்ளே சொல்லிக்கொள்ளுகிறான்] ம்லேச்ச க்ருஹத்திலுள்ள நடை பாவியிற் காணும் சந்த்ர பிம்பத்தைப் போல் அத்யந்த சதுரரான இவர் இங்கே ஸேவை ஸாதிக்கிறாரே! இவர் என் கார்யத்திற்கு ஸஹாயத்தையே செய்வார்.

[தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸர்வதாரி ௵ பங்குனி (மீந) மீ'. மார்ச்-ஏப்ரல்-1949

14—3—49	1௳	திங்கட்கிழமை	—	ஷடசீதி: சூந்ய திதி; [இன்று மீந ஸங்க்ரமண தர்ப்பணம்]
15—3—49	2௳	செவ்வாய்க்கிழமை	—	மீந க்ருஷ்ண ப்ரதமை திதி
19—3—49	6௳	சனிக்கிழமை	—	பஞ்சமி - ஷஷ்டி திதி த்வயம்
20—3—49	7௳	ஞாயிற்றுக்கிழமை	—	மீந க்ருஷ்ண ஸப்தமி திதி
24—3—49	11௳	வியாழக்கிழமை	—	மீந க்ருஷ்ண ஏகாதசி திதி
25—3—49	12௳	வெள்ளிக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி வ்ரதம்: த்வாதசி திதி
26—3—49	13௳	சனிக்கிழமை	—	அதிதி
27—3—49	14௳	ஞாயிற்றுக்கிழமை	—	மீந க்ருஷ்ண த்ரயோதசி திதி
29—3—49	16௳	செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ அமாவாஸ்யை
7—4—49	25௳	வியாழக்கிழமை	—	ஸ்ரீராமநவமி; திருநாராயணபுரம் வைரமுடி ஸேவை
9—4—49	27௳	சனிக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி
10—4—49	28௳	ஞாயிற்றுக்கிழமை	—	மீந சுக்ல த்வாதசி திதி
11—4—49	29௳	திங்கட்கிழமை	—	மீந சுக்ல த்ரயோதசி – சதுர்த்தசி திதி த்வயம்; பங்குனி உத்திரம்
12—4—49.	30௳	செவ்வாய்க்கிழமை	—	மீந பூர்ணிமா திதி

விரோதி ௵ சித்திரை (மேஷ) மீ'

13—4—49	1௳	புதன்கிழமை	—	சூந்ய திதி; மேஷ ரவி 11-21; விஷு புண்ய காலம்; [இன்று மேஷ ஸங்க்ரமண தர்ப்பணம்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருப்பாவை

[ஸம்புடம் 7, ஸஞ்சிகை 10-ன் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருப்பாப்புலியூர்.]

இப்படிப் பெருமாள் தனது ஆஸ்தானத்துக்கு எழுந்தருளுகையில் அவரது ஸ்தவ பாராயண கோஷ்டியில் அமர்ந்து, அவரது சேவகங்களைப் போற்றி ஆநந்தபரிதர்களாய், அவர் சீரிய சிங்காதனத்தில் வீற்றிருந்தவுடனே அவரது புகழைப் போற்றும் க்ரமத்தில் இவ்வவதாரத்தில் ஆரம்பத்தில் நடந்த அதிவிஸ்மயநீயமான லீலைகளை விரித்துப் பேசும் தறுவாயில் தாங்கள் வந்த கார்யத்தையும் சுருங்க விண்ணப்பம் செய்கிறார்கள். வந்திகளுடன் கலந்துகொண்டு பகவானுக்கு ஸமீபத்தில் நிற்கும்படி அவகாசம் வாய்த்தபடியால், அதைக் கைப்பிடித்து மற்றோர் தம்தம் விண்ணப்பங்களைச் செய்துகொள்வதற்கு முன்னமேயே, வெகு சதுரமாக வந்திகளின் வாசிக கைங்கர்யத்தின் அநுஸ்யூதிபோல் தோற்றும்படி ஆரம்பித்துத் தங்கள் மநோரதத்தை வ்யக்தமாகத் தெரிவித்துக்கொண்டார்கள். எங்ஙனேயென்னில்:—

25. ஒருத்தி மகனாய்ப் பிறந் தோரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளரத்
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே யுன்னை
யருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

[பதவுரை] ஓர் இரவில்—ஒரே ராத்ரியில், ஒருத்தி மகனாய் பிறந்து—ஒரு ஸ்த்ரீயின் குமாரனாய் அவதரித்து, [அதாவது: தேவகீ கர்ப்ப ஸம்பூதனாய்த் தோன்றி], ஒருத்தி மகனாய் ஒளித்து வளர—மற்றொரு ஸ்த்ரீயின் [அதாவது: யசோதையின்] குமாரனாக மறைந்து வளர்கையில்; 'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளித்து வளர' என்கிற வசந வ்யக்தியால், தேவகீ கர்ப்பத்தில் பிறந்தும் யசோதையின் குமாரனாய் வளர்ந்ததுபோல் தோற்றமே தவிர, தேஹ ஸம்பந்தம் உண்மையில் கிடையாதென்பது ஸூசிக்கப் பட்டது.

' ஜெவகூரா० ஜெவஹ-ஒ தாயா०விஷ-ஃஸவ-உஐ-ஃஹாஸய।
ஞூவிஈாஸீஃஹ்யா ஹூாஅரா०ஜிஸீரு-ஃரிவவ-ஃஷூ௶ஃ॥
விஶ०யவணதகூஸதநள நிஶாஞெயஷாவகாஶ० வ-ஃஶ-ஃஷஃ ஃஶொரஉஹாநு।
ஐிஸஷி-உஷொாடய० ஃஉஹஸ-உஶொடஸஜூஷொ ஈஜஞொாகவைஃவிஐ०ஐ ந०உஹகூ॥'

இத்யாதிகள் இங்கு அநுஸந்தேயம். தான் தரிக்கிலாளுகி—தான் தரிக்க முடியாமற்போய்; [தான் கொல்லவேணு மென்று வெகு ஜாக்ரதையுடன் ப்ரயத்நப்பட்டு வருகையில், தனக்குத் தெரியாமல் சிறைச்சாலையிலிருந்து வெளிப்பட்டு வேறோரிடத்தில் ஒளிந்து வளரும் வ்ருத்தாந்தத்தை யோகமாயை சொல்லக் கேட்டதுமுதல மநஸ்ஸுக்கு ஸ்வாஸ்த்யம் தவறி நிலையற்றுத் தடுமாறும் கம்ஸனுடைய நிலைமை இதனால் சுருங்கக் கூறப்பட்டது. இந்தத் தரிக்கிலா நிலைமை காரணமாக] தீங்கு நினைந்த—இப்படி ஒளிந்து வளரும் பகவானுக்கு ஆபத்தை விளைவிக்க எண்ணிய; கஞ்சன் கருத்தை—கம்ஸனுடைய உத்தேசத்தை; பிழைப்பித்து—பிழையாக்கி, [அதாவது: தவறும்படி செய்து அச்சால்] அவன் வயிற்றில் நெருப்பு என்ன நின்ற—(இப்படித் தன் ப்ரயத்நங்களெல்லால் விபரீத மாவதைக் கண்டு கம்ஸனுக்குப் பயம் நாளுக்குநாள் வ்ருத்தியடைவதால்) அவனுடைய வயிற்றில் மூட்டிய தீப்போல் நின்ற, நெடுமாலே—மஹா மாயாவியே! [மால்—பிறருக்கு மோஹத்தை யுண்டாக்கும் விசித்ர சக்தி; இதை நிரவதிகமாக உடைத்தாயிருப்பதால் பகவான் 'நெடுமாலே' என்று ஸம்போதநம் செய்யப்படுகிறார். ஒருவர் பிள்ளையாக ஜநநம்; மற்றொருவர் பிள்ளையாக வளர்தல்; எவ்வளவு பேர்கள் எத்தனை விதங்களில் தீங்குகள் செய்ய யத்தனித்தபோதிலும் அவற்றையெல்லால் தீயினில் தூசுபோல் பயன் படாமற் செய்யும் ஸாமர்த்யம்; இப்படி ஒளிந்திருக்கையிலேயே கம்ஸன் மனத்தில் அநவரதம் தோன்றிக்கொண்டு அவனுக்கு அளவிறந்த பயத்தை

' ஞூஸீநஸ்ஸ०விஶ०ஷ்ருஷநுஹ-ஃ०ஜாநஃ ஃய-உடிநுவிஐநு।
அிஞயாஜெநாஹூஷீகெஶ உவஶ்ருதநுய० ஜஹகூ॥'

என்றபடி அநவரதம் உண்டுபண்ணிக்கொண்டிருப்பது முதலிய பல விதமான விசித்ர கார்யங்கள் இங்கு விவக்ஷிதங்கள்.] உன்னை அருத்தித்து வந்தோம்—[இப்படி ஆச்ரித ஸம்ரக்ஷணார்த்தமாய் அவதரித்து அதற்கநுகுணமான ஸர்வ ஜகந்மோஹநமான வ்யாபாரங்களைச் செய்யும் மஹோதாரனை] உன்னை யடைந்து மநோரத ஸித்தி பெறவேண்டு மென்று உன்னிடம் அர்த்திகளாக வந்திருக்கிறோம்; பறை தருதியாகில்—எங்களுடைய அபீஷ்ட ஸித்தியை அநுக்ரஹிப்பாயானால், திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி—லக்ஷ்மீ நாதனான உனக்கு உன் வல்லபைக் கநுகுணமா யமர்ந்துள்ள ஸம்பத்தையும் [அதாவது: நிருபாதிகமாகவும் நிரவதிகமாகவும் நித்யமாகவும் இருக்கும் உனது திவ்ய ஸம்ருத்தியையும், ததநுகுணமான உனது நிஸ்ஸமாப்யதிகமான பராக்ரம விபவங்களையும் நாங்கள் ப்ரீதியுடன் உனக்கு ச்ருதி ஸுகமாகப் புகழ்ந்து], வருத்தமும் தீர்ந்து—எங்களுடைய ஸமஸ்த துக்கங்களும் போக்கடிக்கப்பட்டு;

[அதாவது: துக்க ஹேதுக்களான ஸர்வ பாபங்களும் நசித்து] மகிழ்ந்து— நித்யமான மஹாநந்தத்தை யடைவோம். ஏலோர் எம் பாவாய்.—

நாங்கள் இப்போது கைக்கொண்டிருக்கும் வ்ரதம் உனது அநுக்ரஹத்தால் பூர்த்தியாக வேண்டியிருப்பதால். அதை நீ பூர்த்தி செய்துவைத்தால் நாங்கள் தந்யர்களாய் எங்களுடைய க்ருதஜ்ஞதையின் பரீவாஹமாக உன்னைச் செவிக்கினிமையாய்த் துதிசெய்து அக்கைங்கர்யத்தின் பலனாக எங்களுடைய ஸமஸ்த பாபங்களும் கழிந்து நாங்கள் அநவரதம் அவிச்சிந்நமான தேவரீரது கைங்கர்ய ரூப மஹாநந்தத்தில் மூழ்கி வாழ்வோமாக. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீவீரராகவ வரப்ரஹ்மணே நம:

பகவத் தயை

[ஸ்ரீ. உப. தி. ஈ. வரததேசிகாசார்ய ஸ்வாமி, கருடபுரம்]

ஶ்ரியா ஸார்தம் நித்யம் தயாதேவீம் ஶ்ரிய: பதே: |
வந்தே தத்ஸேவா ஸ்ரீத்யர்யயேஷம் யாயஷதே ஜகத் ||

தயை என்பது தன்னுடைய ப்ரயோஜநத்தைப் பொருட்படுத்தாது, பிறருடைய வருத்தத்தைப் போக்க விருப்பங் கொள்ளுதல் என்கிற குணவிசேஷம். பிறர் வருத்தப்படும்போது தான் வருத்தப்படுவதென்பது இதனுள் அடங்கிய குணமேயன்றி, அது தனித்ததொரு லக்ஷணமன்று. ஒருவன் பிறரைக் காப்பாற்ற வேண்டுமானால் இந்தத் தயாகுணமும் சக்தி யென்ற குணமும் இரண்டும் அவனிடம் முக்யமாக இருத்தல் வேண்டும். இவைகளில் ஒன்றிருந்து ஒன்றில்லாமற்போனால் முற்கூறிய ரக்ஷணம் சிறிதும் நடைபெறாது. இதை ஓர் உதாஹரணத்தால் விளக்குவோம். ஒருவன் ஆழமான ஜலத்தில் விழுந்து முழுகிக்கொண்டு உயிருக்குத் தத்தளித்துக்கொண்டிருக்கிறான். அப்போது கரைமேல் இருந்து பார்த்துக்கொண்டிருப்பவனுக்கு சக்தியிராமல் தயை மாத்ரம் இருந்தால். ஜலத்தில் குதித்து இவனைக் கரையில் போட்டுக் காப்பாற்ற நமக்கு சக்தியும் தைர்யமும் இல்லையே! வீணாய் நான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இவன் உயிர் துறக்கும்படி இருக்கிறதே! அந்தோ! சக்தி வாய்ந்தவர்கள் எவரேனும் இவனைக் காப்பாற்றக் கூடாதா?' என்று தயையினால் மனத்தில் மாத்ரம் வருத்தங்கொண்டு கூச்சலிட்டுக்கொண்டிருப்பனே தவிர, இவனால் ரக்ஷணம் நடக்கமாட்டாது. தயாகுணமில்லாமல் சக்தி மாத்ரம் உள்ளவன், 'இவன் மூழ்கி இறக்கட்டும்; நமக்கென்ன?' என்று இரக்கமற்றவனாய் சும்மா இருந்துவிடுவனேயன்றி, அவன் பிழைப்பதற்குரிய முயற்சி செய்யான். இவனாலும் ரக்ஷணம் நடைபெறாது. ஆதலால் ஒருவனை

ரக்ஷிப்பதற்குத் தயையும் ஶக்தியும் இரண்டும் அத்யவச்யமாய் வேண்டும். இதை நம் ஸ்வாமி தேசிகன்,

" வூஷஶிரிஶூ ஹஜெயிமு-ணா லொயவவெுஞுய-ஜ வீய-ஶக்தி-வாः ।
ஜொஷாஹவெய-ஹெுதெ யஜி நாஜஉயெ கூயாவி நாஹஸ்தாः ॥ "

[தயாதேவியே! தேவரீர் ஒருத்தி இல்லாமற்போனல், தேவரீர் கணவருக்கு வாய்ந்த ஶக்தி முதலான குணங்க ளெல்லாம் நிக்ரஹத்திற்கு உறுப்பாய்த் தோஷங்களாக வல்லவோ மாறிவிடும்?] என்று அருளிச்செய்தார்.

தயையும் ஶக்தியும் இரண்டும், ஸகல கல்யாண குணங்கள் பொருந்திய ஸர்வேச்வரனை லக்ஷ்மீ நாதனுக்கு நிருபாதிகமாயும் நித்யமாயும் பூர்ணமாயும் இருக்கிறபடியால்தான், அவனுக்குத் தன்னை ஆச்ரயித்தவர்களை எல்லா விதத்தாலும் காப்பாற்றப் பூர்ணமான அதிகாரம் இருந்து வருகிறது. அதனல்தான் நாம் அவனை ஆச்ரயித்து ஸம்ஶய மில்லாமல் பலனைப் பெறுகிறோம். இந்தத் தயை ஶக்தி என்கிற குணங்களில் முதலாவதான தயா குணத்தைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்வோம்.

' வயாஹ-ஜவிகாக-ஸூ: கூவயாவய-ஜவாமுயக' என்கிற இடத்தில், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் தனது அந்தப்புர விஷயத்தில் தீவ்ராபராதம் செய்த காகாஸுரனைச் சித்ர வதம் செய்து பார்ப்பதை ப்ரயோஜநமாகக் கொள்ள வேண்டியிருக்க, அவன் அதைப் பொருட்படுத்தாமல் காகாஸுரனுடைய போக்கற்ற நிலைமையினல் உண்டான வருத்தத்தைக் கண்டு கேவலம் தயையால் அவனைக் காப்பாற்றிவிட்டா னென்று ஸ்ரீ வால்மீகி பகவான் விவரித்தார். பிராட்டிக்கும் இதே குணம் உண்டென்பதை,

" வாவா நாம் வா ஶுஹா நாம்வா வயாஹ-ஜாணாம்வுவஜ ।
காய-ம் கரு-ண ஜாயெ-ஜண நகஶிநாவராயூதி ॥ "

என்பதால் மஹர்ஷி வெளியிடுகிருர். இங்கும் அதே ' வயாஹ-ஜாணாஜ ' என்று பதப்ரயோகம் பண்ணியிருப்பதால், ஆர்த்ராபராதம் செய்த ராக்ஷஸிகளைச் சித்ர வதம் செய்ய ஆரம்பித்த திருவடியை அதைச் செய்ய வொட்டாமல் தயையால் மாத்ரம் காப்பாற்றிவிட்டா ளென்று தெரிவித்தார். ' ஜொஷொ யஜூவி தஸூ ஸூாக ' [குற்றம் இருந்தால் இருக்கட்டும்; நமக் கென்ன? ' என்னடியார் அது செய்யார் '] என்பள் பிராட்டி. ' சுஹயம் ஸவ-ஜ ஹஷெ ஹெூ உஉாஜெூதஷ் தம் ஜஜ ' [எல்லாருக்குமே அபயம் அளிப்பது என் வ்ரதம்] என்பது பெருமாள் திருவுள்ளம். ' ஹவெயம் ஶரணம் ஹிவः ' [உங்களுக்கு ஶரணமாக ஆகிறேன்] என்பது பிராட்டியின் திருவுள்ளம். ' விஜிதஸூ ஹியஜ-ஜ ஜூஶரணாமதவஸூ: ' [ஶரண மடைந்தவர்களிடத்தில் நான் அன்புடையவன்] என்பதில் பெயர் போனவர் பெருமாள். ' வூணிவாத வூஸஹாஹிஜெயிஜீ ஜநகாஜா ' [என் திருவடியை அடைந்தவர்களுக்கு அநுக்ரஹம் செய்வேன்] என்பள் பிராட்டி.

' துல்யஶீல வயோவ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணாம் ।
ராகவோऽர்ஹதி வைதேஹீம் தம் சேயம் அஸிதேக்ஷணா ॥ ''

[ஆசாரம், வயஸ், நடத்தை, குலம், அழகு முதலிய குணங்களால் பிராட்டிக்குப் பெருமாள் தான் ஏற்றவர்; பெருமாளுக்கும் பிராட்டி தான் ஏற்றவள்; ஆனால் அவள் ' அஸிதேக்ஷணே.' இந்த விசேஷணம் கொடுத்ததால், ஆச்ரித ரக்ஷணத்தில் பெருமாளை விடப் பிராட்டிக்கு ஏற்ற மென்பது ஸூசிப்பிக்கப்படுகிறது. அவள் அஜ்ஞாத நிக்ரஹை. நிக்ரஹம் கலசாத அநுக்ரஹமயீ என்று பிராட்டியின் திருக்கண் கடாக்ஷம் சபதம் கூறிக் காண்பிக்கிறது. ஆகலின், இத்திவ்ய தம்பதிகள் ஏகாபிப்ராயமாக ஸர்வ விதத்திலும் அநுகூல தம்பதிகளாக இருந்துகொண்டு உலகத்தை வாழ்விக்கிறார்கள். இதைக் கணிசித்தே ' ஸஹயோக்யா அஸிதேக்ஷணா' என்றார் வால்மீகி மஹர்ஷி. கத்யத்தில் எம்பெருமானார், ' பகவந்நாராயணாபிமத..........கல்யாண குணகணாம் ' என்று பிராட்டியை விசேஷிப்பித்தார்.

ராமாவதாரம் மற்றை அவதாரங்களைக் காட்டிலும் தயை கரை புரண்ட அவதார மென்பதை ஸ்வாமி தேசிகன் ' கருணா காகுத்ஸ்தஃ ' என்று ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரத்தில் ஸம்போதந மிட்டுக் காட்டினார். ஒருவன் ஸர்வேச்வரனுடைய தயைக்குப் பாத்ரமாய் விட்டானானால், மற்றொருவருடைய தயை இவனுக்கு அநாவச்யம். இதற்கு முதல் உதாஹரணம் ஸ்ரீ விபீஷணாழ்வான். இவர், மஹாவிச்வாஸாத் யங்க பஞ்சகங்களுடன் தயா மூர்த்தியான சரண்யனிடத்தில் சரணாகதி பண்ண, சரண்யனும் ' அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ' என்று பரஸ்வீகாரம் பண்ண, நடுவில் இதற்கு விகடர்களாயிருந்துள்ள ஸுக்ரீவாதிகளுடைய தயாபாவம் கார்யகரமாக ஆகவில்லை. ஒருவனுக்கு சரண்யனுடைய தயை இல்லாமற்போனால் மற்றொருவனுடைய தயையும் அகிஞ்சித்கரம். இவனிடம் தயை காட்டி இவனை ரக்ஷிக்க அவர்கள் சக்த ரல்லர். இதற்குக் காகாஸுரன் த்ருஷ்டாந்த மாவன். பிராட்டியினிடமுள்ள ப்ரீத்யதிசயத்தால், காகாஸுரனிடம் கடுஞ் சினங் கொண்டு பெருமாள் ப்ரஹ்மாஸ்த்ரம் தொடுக்க, சிவன் சதுராநநன் முதலிய தேவர்கள் யாவரும் இவனை ரக்ஷிக்க இயலாதவர்களாய்ப் பீதி யடைந்து அசதுரர்க ளானார்கள் என்றோ? இது,

'' த்வயி ரக்ஷதி ரக்ஷகைः கிமந்யைः த்வயி சாரக்ஷதி ரக்ஷகைः கிமந்யைः । ''

என்னும் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ ஸூக்தியாலும்,

'' ஸ பித்ரா ச பரித்யக்தஃ ஸுரைஶ்ச ஸமஹர்ஷிபிः ' த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கதः '

'' ப்ரஹ்மா ஸ்வயம்பூஶ் சதுராநநோ வா ருத்ரஸ் த்ரிணேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா ।
இந்த்ரோ மஹேந்த்ரஸ் ஸுரநாயகோ வா த்ராதும் ந ஶக்தா யுதி ராமவத்யம் ॥ ''

[ஹே பகவந்! நீ ரக்ஷிக்கக் கை கொடுத்தபோது இதரர்கள் ரக்ஷிப்பதேன்? நீ கைவாங்கினால் இதரர்களால் ரக்ஷிக்க முடியுமா? முடியாது. உன்னுடைய

தயை இருந்தால் கிடைப்பதற்கரிய பொருளே இல்லை; உன் தயை இல்லாவிடில் கிடைக்கும் பொருளே யில்லை. நான்கு முக முடையவனு யிருந்தாலும், மூன்று கண்கள் உடையவனு யிருந்தாலும், ஆயிரங் கண்ணனு யிருந்தாலும், ஸ்ரீ ராமபிரானுடைய கோபத்துக்கு விஷயமானவனை அவர்களால் காக்க முடியாது] என்னும் ஸ்ரீ ஸூக்திகளாலும் ஸித்தம்.

இது விஷயமாய்த் தயாஶதகத்தில் ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த ஒரு ச்லோகம் இங்கு அநுஸந்தேயம். அதன் அர்த்தாநுபவத்தையும் யதாமதி செய்வோம்.

“ சுநந்யாயீநஸூநு ஹவதிவாரதஞு: வூணஉதாம
கூவெஹவஃஉஷா நறணயதி தெஷாஉவகூதிழ ।
வதிஸூக்ஷவாராயஃஃம வூயயதிவூஷகூாயாவதிః
வஃவஸூாம வெயாதஃாஜிதி விவடியஞீவிஹாவவி ॥ ”

[நிருபாதிக நித்ய நிரவத்ய ஸகல கல்யாண குண பரிபூர்ணனுயும், ஸத்ய ஸங்கல்பனுயும், ஸர்வேச்வரனுயும், ஸர்வ ஶக்தனுயும் இருந்துள்ள பகவானுக்குத் தயாதேவி வாழ்க்கைப்பட்டு, ஸர்வ விதத்திலும் அவனுடைய வால்லப்யத்தை அடைந்து, அந்த வால்லப்யத்தால் ஸர்வ ஶக்தனை அவனைத் தலைகீழாக ஒரு புரள் புரட்டித் தனக்கு ஸ்வாதீனனுகச் செய்ய வல்லமை கொண்டிருக்கிருள். அகங்யர்தீநன் ஶரண்யன்; அவன் மற்றொருவருக்கும் அடங்கினவ னல்லன். அவனையும் தயாதேவி, தன்னை ஆச்ரயித்தவனிடம் அடங்கினவனுகச் செய்து விடுகிருள். தன்னையே த்யாகம் செய்கிற விச்வாமித்ரர் முதலான முனிவர்களைக் குறித்து ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், ‘நான் உங்கள் கீழ் அடங்கினவன்; உங்கள் உத்தரவின்படி நடக்க ஸித்தமாயிருக்கிறேன்; உத்தர விட வேண்டும்’ என்று ஸாதிக்கும்படியும், ‘இரண்டு ஸேனைகளின் இடையில் என் தேரை நிறுத்தக்கடவாய்’ என்று ஆச்ரிதனை அர்ஜுநன் நியமிக்கும்படியாகவும் தூத்ய ஸாரத்யாதிகளைத் தனக்கு ஸ்வரூப நிரூபகமாகவும் கொண்டன்றோ அவன் இருந்தது? நாம் பெருமாளை அழைக்கும்போது ‘பரப்ரஹ்ம ரூப! புருஷோத்தமா!’ என்று பரத்வ வ்யஞ்ஜகமான திருநாமங்களை யிட்டழைப்பதைவிட, ‘பார்த்தஸாரதே! பாண்டவதூதா!’ என்று ஸௌலப்ய வ்யஞ்ஜகமான திருநாமங்களை யிட்டழைத்தால் ஸர்வேச்வரன் நம்மை உகப்பன். இவை யெல்லாம் கேவலம் தயாகார்யம். ஸர்வஜ்ஞனையும், ஆச்ரிதர்களுடைய தோஷங்கள் அவனுக்குத் தெரியாமலிருக்கும்படி பண்ணிவிடுகிருள் தயாதேவி. காகாஸுரன் உட்பட நம் எல்லாருடைய பாபங்களையும் ஸர்வேச்வரன் கணிசியாம லன்றோ இருக்கிருன்? தினந்தோறும் நாம் செய்யும் பாபங்களாகிற குற்றங்களுக்கு ஈடான தண்டனை விதிக்க அவன் திருவுள்ளம் பற்றினுனுகில், ஒருவகையிலும் நமக்கு விரகில்லாமற்போம். நிமிஷத்துக்கு நிமிஷம் மேன்மேல் பொங்கும் பாபமாகிற கரையில்லாத ஸமுத்ரத்தில், எங்கேயோ ஒரு மூலையில் ஒரு ப்ராயச்சித்தம் ஏற்பட்டால், அதுவும் அநேக தோஷங்களால் சரியாக நிறைவேறுகிறதில்லை. இப்படிக் கதியற்று நிற்கிற

அடியேனுக்குத் தேவரீர் திருவுள்ள மிரங்கித் திருவுள்ளத்தில் பட்ட எதோ ஒரு வழியைப் பரிஹாரமாக ஏற்படுத்தினுலொழிய அடியேனுக்கு வேருெரு விரகும் இல்லை.]

என்று ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்தார். நிருபாதிகமாக ஸர்வ ஶேஷியானவனையும் தயாதேவியானவள் தனக்கு ஶேஷனுகச் செய்துகொண்டு விடுகிருள். 'வாராய௲தூ௱ வூயயதி' என்பதால், தயாகார்ய பூத ஸ்ருஷ்டி ஸ்தித்யாதி வ்யாபாரங்களான ஸ்பஷ்ட லிங்கங்களாலே நிச்சிதமாயுள்ள தயாதேவியி னிடமுள்ள ஸர்வேச்வர னுடைய ஶேஷத்வத்தை அவனுலும் தயாதேவியாலுங்கூட இல்லை செய்ய முடியா தென்பது ஸூசிப்பிக்கப்படுகிறது.

'தூ௱வாராய௲தூ௱ வூயயதிவ௱ஷக்ஷாயஉாவதிঃ' என்கிற ஸரளி வ்யாஹாரத்தாலே,

'ஶாயாவீவஉஶாநடீ௱ தூக்ஷா வெகுூணஉூ தூஉழு।
வூாஶிவூஷிணீதீரெ ஶஉயாஉஹஶொஉதெ॥'

என்றபடி நித்ய நிரதிஶயாநந்த ரூபமான திவ்ய லோகத்தை விட்டு, சேதந ரக்ஷணார்த்தமாக ஒரு மலையில் உள்ள குளக்கரையில் நிரந்தர வாஸம் பண்ணுவதே தயாதேவியி னிடமுள்ள ஸர்வேச்வர னுடைய ஶேஷத்வத்திற்குப் போதுமான அடையாள மாகிறதென்று காட்டுகிருர்.

இப்படி ப்ரமணங்களால் ஏற்பட்ட ஈச்வர னுடைய ஸ்வபாவ விஶேஷங்களை மாற்றிவிடும்படிக் கீடான தன் கணவனுடைய ப்ரீதி விஶேஷத்தை ஸம்பாதித்திருப்பத னடியாகத் தனக்கு ஸ்வாதீநனுன விச்வபதியைக் கொண்டு தன்னை ஆச்ரயித்தவர்களை அவரவர்களுடைய இஷ்டப்படி ரக்ஷிக்க வல்லமையுடைய உன்னை ஶரணமா யடைந்த அடியேனுக்கு இஷ்டப்படி பல ஸித்தியில் ஒருவிதமான ஸந்தேஹ லேஶமுமில்லை யென்று தயாதேவியை நோக்கி ஸம்போதித்து ஸ்துதி செய்கிருர். இப்படி நூறு ச்லோகங்களால் தயாதேவியை அநேக விசித்ர உத்ப்ரேக்ஷ உல்லேகாதி சமத்கார புரஸ்ஸரமாய் ஸ்துதித்துப் பரமைகாந்திகளான ஸஹ்ருதயர்களான வித்வான்களுடைய மனஸ்ஸை ஆகர்ஷிக்கிருர் ஸ்வாமி தேசிகன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதெ லக்ஷ்மீ நரஸிம்ஹ பரப்ரஹ்மணெ நமঃ

செய்திகள்

ஸ்ரீ அஹோபில மடம் 42-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரின் 70-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரின் 70-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் பெருமாள் கோவில் ஸ்ரீ அஹோபில மடத்தில், நிகழும் ஸர்வதாரி௵ தை௴ 15-ம்வ (28—1—49) வெள்ளிக்கிழமை உத்திராட நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் வெகு ஸம்ப்ரமமாய் நடைபெற்றது.

காலையில், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கும், ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கும், 40, 41-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கர்களுக்கும் விசேஷ திருமஞ்சனம் பண்ணப்பட்டு ஸம்பாவநாதி விநியோகங்கள் நடந்தேறின. ராத்ரி, ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், 40, 41-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கர்கள் பார்ச்வத்தில் எழுந்தருளியிருக்க, டோலையில் முன் மண்டபத்தில் எழுந்தருளி ஸேவை ஸாதித்தார். ஸஹஸ்ரநாம பாராயணாநந்தரம், தமிழ்ப் பண்டிதர் ஒபகடம் ஸ்ரீ. உப. K. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அழகிய சிங்கர் விஷயமாகத் தாம் கவநம் செய்த தமிழ்ப் பாக்களைப் படித்து, ஸ்ரீ அழகிய சிங்கரின் ஶமதமாதி கல்யாண குணங்களைப் பற்றியும், ஔதார்ய குண சீலங்களைப் பற்றியும் பரக்க உபந்யஸித்தார். அநந்தரம் ஸ்ரீ மடத்து ஆராதகர் வித்வான் அழிசூர் ஸ்ரீ. உ.ப. திருமலாசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கரின் அஸாதாரணமான கல்யாண குணங்களைத் தனியனை ஸேவித்து, அத்தனியன் அமைந்திருக்கும் அழகையும், அதன் பொருளையும், ஸ்ரீ அழகிய சிங்கரின் ஆசார்யகுண பூர்த்தியையும் பற்றிப் பேசினார். பிறகு, ப்ரஹ்மதேசம் வித்வான் பவுண்டரீகபுரம் ஸ்ரீ. உப. நரஸிம்ஹசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஸௌலப்ய ஸௌஶீல்யாதி கல்யாண குணங்களைப் பற்றிப் பேசினார். ராத்ரி 9-மணிக்கு மஹோத்ஸவம் பூர்த்தியடைந்தது.

மாடபூசி. ஸ்ரீநிவாஸாசாரியர்

* * * * *

ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கருடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்க .... ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம், தில்லஸ்தாநம் ஸ்ரீ அஹோபில மடத்தில், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோபராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனால், நிகழும் ஸர்வதாரி ஸூ. தை மீ. 28உ (10—2—49) வியாழக்கிழமையன்று அதிவிமர்சையாய் நடத்தப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிபால் வர்ஷந்தோறும் நடத்தப்பட்டு வரும் உத்ஸவத்தில் இது 35-ஆவதாகும். ஸ்ரீ ஸ்வாமி தமது வயோதிக ப்ராப்தா சக்தியையும் அதிக்ரமித்து, ‘ஸ்வயமாசரதே யஸ்து’ என்னும் கணக்கில், இம்மஹோத்ஸவத்தைப் பல விடங்களிலும் சிறப்புற நடத்திவருவது, சிஷ்யக்ருத்யாவச்யத்தை உலகுக்குக் காட்டுவதோடு, ‘[illegible] .... [illegible]’ என்பதையும் நிதர்சநமாக்குகிறது. இம்மஹோத்ஸவம், தை மீ 26உ செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டு, 28-ம் தேதி முடிவடைந்தது. அன்று ஸ்ரீ மடத்திலிருந்து ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுக்கும், ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கருக்கும், ஸ்ரீ அழகியசிங்கர் பாதுகைகளுக்கும் திருவீதிப் புறப்பாடு நடந்தேறிற்று. பின்னர் ஸ்ரீ ஸ்வாமி அம்மஹாதேசிகர்களோடு, உள்ளூர் ஸ்ரீநிவாஸப் பெருமாளையும் ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் முதலான எம்பெருமான்களையும் மங்களாசாஸநம் பண்ணும்படியிருந்தது. சாத்துமறை விசேஷமாக நடைபெற்ற பின்னர், சுமார் 300 திருநாமங்களுக்குத் ததீயாராதநமும், அநந்தரம், பாராயணத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனைகளும் நடந்தேறின. இம்மஹோத்ஸவத்துக்குச் சென்னை, திரு

வஹீந்த்ரபுரம், தையாறு, தேரழுந்தூர், திருக்குடந்தை முதலிய திவ்யதேசங்களிலிருந்தும், ஸமீபத்திலுள்ள கல்யாணபுரம் ராயம்பேட்டை முதலிய இடங்களிலிருந்தும் அநேக திருநாமங்கள் ஸேவைஸாதித்து க்ருதார்த்த ரானார்கள்.

T. S. சேஷாத்ரி தாஸன்.

* * * *

பம்பாய் மாதுங்காவில் 40, 41-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கர்களின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவங்கள்

பம்பாய் மாதுங்காவில், ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தாநத்தில் 40, 41-ம் பட்டங்களில் மூர்த்தாபிஷிக்தர்களாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், இவர்களுடைய அவதார மஹோத்ஸவங்கள், ஸேவை சாத்துமறை, ஆசார்ய ஸம்பாவனை ததீயாராதநம் முதலியவைகளுடன், ஸ்ரீ. P. R. ஸுந்தரராஜ அய்யங்கார் திருமாளிகையிலும், ஸ்ரீ. A. G. நரஸிம்ஹ அய்யங்கார் திருமாளிகையிலும் க்ரமேண இனிது நடைபெற்றன. இவ்விட மிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் பலர் ஷ உத்ஸவங்களில் அந்வயித்து அவைகளைச் சிறப்புறச் செய்தது குறிப்பிடத் தகுந்தது.

சடகோப தாஸன்

* * * *

ஸ்ரீ வேதாந்ததேசிக ஸம்ப்ரதாய ஸபா, மாதுங்கா, பம்பாய்

ஷ ஸபையின் ஆதரவில் ஸ்ரீ. உப சக்ரவர்த்தி விஜயராகவாசார்ய ஸ்வாமியின் அத்யக்ஷதையில், பம்பாய் தாதரில், கொடவாசல் ஸ்ரீமான் T. K. ராமஸ்வாமி அய்யங்கார் (Rtd. Tech. Engr. B E S T Co.) திருமாளிகையில் கௌசிக தேசிகன் என்னும் விஷயம், ராமாயண ரத்நாகரம் ஸ்ரீ. உப. சித்தூர் ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமியால் உபந்யஸிக்கப்பட்டது விச்வாமித்ர மஹர்ஷியினுடையவும் ஸ்ரீ தேசிகனுடையவுமான விலக்ஷணமான பகவதநுபவ ப்ரகாரங்களையும், இருவரும் சேதநவர்க்கத்துக்குப் பரம் பொருளைக் காட்டிக்கொடுக்கும் விஷயத்தில் அவர்கள் செய்திருக்கும் லோகோத்தரமான உபகார விசேஷத்தையும், அவர்களின் அதிமாநுஷ க்ருத்யங்களையும் இந்த ஸ்வாமி மிகவும் அழகாக நிரூபித்து, பல அம்சங்களில் இருவர்க்கு முள்ள ஸாத்ருச்யத்தை விஸ்தாரமாக ஸமர்த்தநம் செய்தருளினர். 'நிரஞ்ஜநம் நிஷ்கள ஸ்வரூபம்......... நஜெஹிருஷ:' என்னும் பாசுரத்தை அநுஸந்திக்கும் க்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிக்கு வரதன் அர்ச்சையில் பரமபதநாதனை ஸேவைஸாதித்த ப்ரகாரம் 'வவந்தே வரதம் வஸீ' என்னும் வரதனை சக்ரவர்த்தித் திருமகன் விபவத்தில் மஹர்ஷியின் வாஸஸ்தாந மாகிற ஸித்தாச்ரமம் எழுந்தருளி அவ்விடம் மஹர்ஷி வாமநாவதார கதையை ப்ரஸ்தாவிக்கும் க்ரமத்தில் மஹாபலியின் வாக்யமாக 'தவைவாபயம் தவைவாஸ்மி......... ஸ்வாமிஹம் சரணம் கத:' என்கிற இரண்டு பாசுரங்களையும் தாமே அநுஸந்தித்து, ராமனை ஜகத்காரண வஸ்துவாக ஸேவிக்கப்பெற்று, சரணவரணம் செய்தா ரென்பதையும், ஸ்ரீ ஸ்வாமி பஹு க்ரந்த முகேந அர்ச்சையில் தாமே என்று சொல்லலாம்படி பரமாத்ம ஸ்வரூபத்தை யறிந்து அநுபவித்த ப்ரகாரம், மஹர்ஷி 'அஹம்வேத்மி (அஹமேவ வேத்மி) என்று தம் வாக்யத்தாலும்,

‘[illegible] ॥’

என்று பர்யாயேண ‘[illegible]’ என்று பெருமாளையும் மஹர்ஷியையும் சுட்டிக் காட்டிச் சொல்லும் வஸிஷ்ட வாக்யங்களாலும், மஹர்ஷி விபவத்தில் பகவத் ஸ்வரூபத்தை யறிந்து அநுபவித்தபடியையும் உபபாதகம் செய்தது அம்ருத வர்ஷமா யிருந்தது. பிறகு அத்யக்ஷர் ஸ்வாமி, மஹர்ஷி மிதிலையில் பெருமாளையும் பிராட்டியையும் சேர்த்துவைத்த மிதுநமே உத்தேச்ய மென்று காட்டிப்போந்ததை ஸ்வாமி தேசிகன் பல ஸ்ரீஸூக்திகளால் வெளியிட்டதை அழகாய் எடுத்துச் சொல்லி ஸதஸ்ஸைப் பூர்த்தி செய்தருளினர்.

சடகோப தாஸன்

* * * *

பண்ணுருட்டி ஸ்ரீ மஹாராதநம்

ஸ்ரீ அஹோபில மடத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் 26-வது வார்ஷிக மஹாராதந மஹோத்ஸவம், பண்ணுருட்டி அக்ரஹாரத்தில், சென்ற 24—1—49 வரை மூன்று திநங்கள் மிகவும் விசேஷமாய்க் கொண்டாடப்பட்டது. அம் மூன்று திநங்களும் ஸ்ரீமான் திருப்பாப் புலியூர் அட்வகேட் ஸ்ரீ. உப. T. S. ராமாநுஜாசார்யர், ‘அஞ்சலென அருள்பொழியும் வள்ளல்’ என்பதுபற்றியும், கள்ளக்குரிச்சி வக்கீல் ஸ்ரீ உப. T. S. தாதாசார்யர், ‘ராமாநுஜர்’ என்பது பற்றியும், ராமாயண பூஷணம் கோமல் ஸ்ரீ. உப. சேஷாத்ரி அய்யங்கார் ‘குசேலோபாக்யாநம்’ என்பது பற்றியும், வித்யாரத்நம் மதுராந்தகம் ஸ்ரீ. உப. ரங்கநாதாசார்யர் ‘ஆண்டாள் திருக்கல்யாணம்’ என்பதுபற்றியும் அரிய உபந்யாஸங்கள் செய்தருளினர்கள். மூன்று திநங்களும் விசேஷ ததீயாராதநங்கள் நடைபெற்றன. மூன்றும் நாள் இரவு ஸ்ரீ அழகியசிங்கரின் ப்ரஸாத ரூபமான ஸம்பாவனைகள், கைங்கர்யம் செய்த ஸ்வாமிகளுக்கும் வித்வான்களுக்கும் வழங்கப்பட்டுக் கைங்கர்யம் இனிது முடிவடைந்தது.

ஒரு சிஷ்யன்

* * * *

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

சென்னை ஸர்க்காரால் சட்டமாகக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருக்கும் சென்னை ஹிந்து மத தர்ம ஸ்தாபந சீர்திருத்த மசோதா, தர்மத்துக்கும் ந்யாயத்துக்கும் பொருந்தாம லிருப்பதாலும், அரசியல் நிர்ணய ஸபையின் மூலாதாரமான லக்ஷ்யத்துக்கே விரோதமா யிருப்பதாலும், நாஸ்திக்யத்தை வ்ருத்தி செய்ய ஹேது உண்டாகு மாதலாலும், அதைக் கண்டித்துப் பேச 31—1—49 திங்கட்கிழமை யன்று ஸ்ரீ. T. R. ஸுப்பராமன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் செய்யப்பட்ட தீர்மாநங்கள், சென்னை ஸர்க்காருக்கும் டில்லி மத்ய ஸர்க்காருக்கும் கவர்னர் ஜெனரலுக்கும் தந்தி மூலமும் தபால் மூலமும் அனுப்பப்பட்டன. மேலும்: மத்ய ஸர்க்காரால் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருக்கும் ‘ஹிந்து கோட்’ மசோதாவைப் பற்றியும் கண்டித்துத் தீர்மாநங்கள் செய்யப்பட்டன.

R. நரஸிம்ஹாசார்யர்

[ஸ்ரீ. வி. ஸ. ஸபைக் கார்யதர்சி]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் வித்வத் ஸதஸ்ஸும்

ஸ்ரீ அஹோபில மடத்துத் திவ்யாஸ்தாநத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய 70-வது வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவமும், எட்டாவது வார்ஷிக மாலோல வித்வத் ஸதஸ்ஸும், ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவோலக்கத்தில், சென்ற தை மாஸத்தில் நடைபெற்றன வென்று சென்ற ஸஞ்சிகையில் விஜ்ஞாபித்துக் கொண்டுள்ளோம். ஆனால் அந்தக் காலத்தில் அந்த உத்ஸவங்களை ஸாக்ஷாத்தாக ஸேவித்துக் கொள்ளும்படியான பாக்யம அடியேற்கு நேராததால்; கர்ணகர்ணிகமாகக் கேள்விப்பட்ட அம்ஶங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு அந்த உத்ஸவங்களின் வைபவத்தைப் பூர்ணமாக விண்ணப்பித்துக்கொள்ளக் கூடாமல், அதை ஸங்க்ரஹித்துக் கிஞ்சிதம்ஶத்தைப்பற்றி மாத்ரம் ப்ரஸ்தாவித்திருந்தோம். அதன் பூர்ண அறிக்கையை எழுதி அநுக்ரஹிக்கும்படி ஸ்ரீ ஸந்நிதிக்கு விஜ்ஞப்தி பத்ரிகையும் அனுப்பியிருந்தோம். அதற்குப் பதில் ஒன்றும் இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் மறுபடியும் இந்த விஷயத்தைப்பற்றி நமது ஸஞ்சிகையில் ப்ரஸ்தாவிக்கலா மென்று எண்ணியிருக்கிறோம்.

இப்பொழுது விஷயங்கள் அடியேனுடைய காதுக்கு எட்டின வரை சிற்சில ப்ரவ்ருத்திகளைப்பற்றி மாத்ரம் விண்ணப்பித்துக்கொள்கிறோம். ஸ்ரீ ஆஸ்தாந வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும், தேவனார்விளாகம் ஸ்ரீ. உப. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமியும், திருப்பதி ஸ்ரீ. உப. திருமலை தாதாசார்ய ஸ்வாமியும், மதுராந்தகம் ஸ்ரீ உப. தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமியும், இன்னும் இவர்களைப் போன்ற அநேக வித்வத் ரத்நங்களும் நாநாதேஶங்களிலிருந்து, ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமநத்தின் ப்ரகாரம் ஸதஸ்ஸில் ஸந்நிஹிதர்களாக எழுந்தருளியிருந்தார்கள். இந்த உத்ஸவத்தில் தமக்கிருந்த கௌதூஹலத்தால், அநேக லௌகிக ப்ரபுக்களும் சிற்சில திநங்கள் எழுந்தருளி ஸதஸ்ஸின் வைபவத்தை அநுபவித்துப் போனார்கள். இந்த ஸதஸ் பத்துத் திநங்கள் நடைபெற்றன. முதல் இரண்டு மூன்று திநங்கள் பூர்வாஹ்நம் ஸாயாஹ்நம் ஆக இரண்டு வேளைகளிலும் ஸதஸ் நடை

பெற்ற தென்றும், பிறகு ப்ரதி திநம் மத்யாஹ்நாத் பரம் மாத்ரம் நடந்தேறிய தென்றும் நாம் கேள்விப்படுகிறோம். ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம் முதலான வேதாந்த க்ரந்தங்களில் வாக்யார்த்தங்கள் நடைபெற்றனவாம். என்னென்ன விஷயங்களில் வாக்யார்த்த விசாரம் செய்யப்பட்ட தென்றும், என்னென்ன அபூர்வமான உபபாதநங்கள் பண்டித ரத்நங்களால் விவரிக்கப் பட்டன வென்றும் விஜ்ஞாபித்துக்கொள்வதற்கு ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீ முகத்தை ப்ரதீக்ஷித்திருக்கிறோம்.

தைமீ". 15வ வெள்ளிக்கிழமை யன்று ஸ்ரீ அழகிய சிங்கருடைய திரு நக்ஷத்ர மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. அன்று பூர்வாஹ்நத்திலேயே ஸ்ரீ அழகிய சிங்கர் ஸதஸ்ஸுக்கு எழுந்தருளி, அந்த ஸதஸ்ஸில் அந்வயித் திருந்த வித்வான்கள் யாவர்க்கும் த்ருப்திகரமான ஸம்பாவநையையும், மதாமதி களுக்கு அபேக்ஷிதமான த்ரவ்யத்தையும் அநுக்ரஹித்தார். இந்த ஸம்பாவநை விஷயமாக இரண்டு மூன்று ஸஹஸ்ர ரௌப்யம் செலவாகியிருக்கிற தென்று தெரிகிறது. இந்தப் பத்துத் திநங்களிலும் அங்கு எழுந்தருளியிருந்த வித் வான்களுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் ததீயாராதநம் முதலிய உபசாரங் கள் குறைவின்றி நடந்தனவாம். திருநக்ஷத்ர திநத்தன்று நடந்த ததீயாரா தநத்தை ஸ்ரீ. உப. பாராஞ்சி க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி மிகவும் வீலக்ஷணமாக நடத்தினரென்று கேள்விப்படுகிறோம். ஸ்ரீ. உப. திருக்குடந்தை அண்ணா ஐயங்கார் ஸ்வாமி, முதல் நாலேந்துநாள் ததீயாராதநத்தின் பாரத்தை வஹித்தாராம். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விபூதியில் இம்மாதிரியான மஹோத் ஸவங்கள் உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாகும்படி ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸங்கல்பிக்க வேண்டு மென்று ப்ரார்த்திக்கிறோம். அன்று நடந்த விசேஷ உத்ஸவங்களுள் ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்ட செவிக்கினிய உபந்யாஸம் ப்ரதாந மான அம்சம். ஸ்ரீ ஸ்வாமியினுடைய செஞ்சொற்கள் அங்கு ஸந்நிஹிதர்களா யிருந்த ஸகல ஜநங்களுடைய மனத்தையும் கவர்ந்தன. முடிவில் தாம்பூல சந்த நாதிகள் வழங்கப்பட்டு உத்ஸவங்கள் இனிது முடிவடைந்தன.

* * * *

ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமநத்தை முன்னிட்டு, ஆஸ்தாந வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி கீழ்க் குறிக்கப்பட் டுள்ள உத்ஸவங்கள் முடிந்தவுடன் ஸ்ரீ மதுராந்தகம் எழுந்தருளி, அநேக உபயுக்தங்களான உபந்யாஸங் களைச் செய்தருளிவந்தாரென்று நாம் அறிகிறோம். பதினைந்து திநங்களுக்குக் குறையாமல் ஒரு மாஸ பர்யந்தம் அநேக அபூர்வ விஷயங்களைப்பற்றி உபந் யாஸங்கள் நடைபெறவேண்டு மென்பது ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுள் ளம். அந்தத் திருவுள்ளத்தை மேற்கொண்டே ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி யும் அங்கிருந்து ஸ்ரீரங்கம் எழுந்தருளி, பிறகு மாசிமீ". 2வ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ மதுராந்தகத்துக்கு எழுந்தருளி, அந்த ஞாயிற்றுக்கிழமை திநமே உபந்யாஸங்களை உபக்ரமித்தார். அந்த ஸ்தல வாஸிகளான ஆஸ்திகர்களும்,

ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமியின் உபந்யா ஸங்கள்

அவ்விடத்தில் ஏற்பட்டிருக்கும் பாடசாலையின் ப்ரவசந கர்த்தாக்களும், வித்யார்த்திகளும், மிக்க ச்ரத்தையுடனும் ஆநந்தத்துடனும் உபந்யாஸமாகிற அம்ருதாஸ்வாதத்தை அநுபவித்துவந்தார்கள். எட்டுத் திநங்கள் இம்மாதிரி உபந்யாஸங்கள் நடந்தன. எட்டாவது திநத்தில் ஸ்ரீ ஸ்வாமிக்குத் திருமேனியில் அஸ்வாஸ்த்யம் ஏற்பட்டபடியால், உபந்யாஸங்களை உத்தேசித்தபடி பூர்த்தி செய்ய முடியாமல், ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீரங்கம் எழுந்தருளிவிட்டார். இது ஒரு பாக்யக் குறைவே. ஆனால் பின்பு ஒரு காலத்தில், இதை, இந்த ஸ்வாமி எழுந்தருளிப் பூர்த்திசெய்வ ரென்றே நாம் நம்புகிறோம்.

*　　　*　　　*　　　*

ஸ்ரீ பகவத் கீதையில் 16-ஆவது அத்யாயத்தில், தைவ ஸர்க்க மென்றும் ஆஸுர ஸர்க்க மென்றும் இரண்டு பிரிவுகளாக ஜநங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறார்க ளென்றுள்ளது. சாஸ்த்ர மென்பது பகவானுடைய ஆஜ்ஞை யென்றும், அதை அநுஸரித்து நடக்கிறவர்கள் தைவ விபாகத்தைச் சேர்ந்தவர்க ளென்றும், அவர்கள் தைவத்தால் அநுக்ரஹிக்கப் படுகிறார்க ளென்றும், அந்தத் தைவாஜ்ஞைக்கு அதிக்ரமித்து நடப்பவர்கள் ஆஸுர ஸர்க்கத்தைச் சேர்ந்தவர்க ளென்றும், அவர்கள் தைவத்தால் நிக்ரஹிக்கப்படுகிறார்க ளென்றும் விவரித்துவிட்டு, ஆஸுர ஸ்வபாவத்துக்குக் காமம் க்ரோதம் மோஹம் ஆகிய மூன்றும் மூல ஹேதுக்களாக இருக்கையிலும், அவைகளைக் காட்டிலும் ப்ரதாந மூலமாக இந்த ஹேது ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் அதி கோரமான தபஸ் முதலியவைகளைச் செய்தபோதிலும், அது அசாஸ்த்ர விஹிதமா யிருந்தால், அது தைவாஜ்ஞைக்கு விபரீதமாக ஆகிறபடியால், அதனால் அவனுக்கு ஸ்வல்ப ஸுகம்கூடக் கிடைக்கமாட்டா தென்றும், அவன் அநர்த்தமே யடைவானென்றும் விவரித்திருக்கிறார்.

அசாஸ்த்ரீயமான
காய க்லேசம்
ஆஸுரமே

“ 𑌅𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌘𑍋𑌰𑌂 𑌤𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑍇 𑌤𑌪𑍋 𑌜𑌨𑌾𑌃 ।
𑌦𑌮𑍍𑌭𑌾𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌬𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥
𑌕𑌰𑍍𑌶𑌯𑌨𑍍𑌤𑌃 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌂 𑌭𑍂𑌤𑌗𑍍𑌰𑌾𑌮𑌮𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌮𑌾𑌂 𑌚𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌃𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌂 𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌸𑍁𑌰𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌨𑍍 ॥ ”

[அளவற்ற ஆயாஸத்தை மேற்கொண்டபோதிலும், டம்பம் அஹங்காரம் முதலியவைகளுடன் கூடினவர்களாக, காமத்தினுடையவும் ராகத்தினுடையவும் பலத்தைக் கைப்பற்றி க்ரியைகளை அவர்கள் செய்யும்பக்ஷத்தில், அவர்கள் தமது சரீரத்திலிருக்கும் பூத ஸமூஹத்திற்கும் அதற்குள் தைவத்தினுடைய சரீரமாயிருக்கும் ஜீவ ஸமூஹத்திற்கும் பெருத்த கஷ்டத்தை உண்டு பண்ணுகிறபடியால், அவர்கள் ஆஸுர விபாகத்தைச் சேர்ந்தவர்களே யென்றும், ஸுக லேசமும் கூடப்பெறாமல் அவர்கள் அநர்த்தக் கூட்டங்களில் விழுகிறார்கள்] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது அநேக பெரியோர்கள், தமது இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளும்பொருட்டுத் தமது விரோதிகளுக்கு க்லேஶத்தை உண்டுபண்ணுவதற்காக 'உண்ணு வ்ரதம்' என்னும் ஒரு வ்ரதத்தைக் கைப்பற்றி வருகிறார்கள். ஶாஸ்த்ரத்தில் சிற்சில காலங்களில் உண்ணு வ்ரதத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. மற்றைக் காலங்களில் அம்மாதிரியான க்லேஶத்தை ஏறிட்டுக்கொண்டால், பூத ஸமூஹத்திற்கும் அதற்குள் இருக்கும் ஜீவ ஸமூஹத்திற்கும் க்லேஶத்தை உண்டு பண்ணி, அஶாஸ்த்ர விஹிதமான கர்மத்தை அநுஷ்டிப்பதால் அவர்கள் நரகத்தையே அடைகிறார்களென்றும் சொல்லியிருக்கிறது. ஆகையால் இம்மாதிரி தமது இஷ்டத்தையே ஆதாரமாகக் கொண்டு உண்ணு வ்ரதம் இருப்பது நமது ஹிந்து ஶாஸ்த்ரத்துக்கு விரோதமென்பதை இப்பெரியோர்கள் அறியவேண்டும்.

ஸமீபத்தில் ஸ்ரீ ஸத்யாநந்த ஸரஸ்வதீ என்னும் ஒரு ஸந்யாஸி ராஜாங்கத்தாரால் ஆரம்பிக்கப்படும் சில க்ரம விருத்தமான சீர்திருத்தங்களைத் தடுக்கும் பொருட்டுப் பெரியதொரு உண்ணு வ்ரதத்தைக் கைப்பற்றினர். சற்றேறக் குறைய 20-தினங்கள் ஆஹாரம் இராமல் இருந்துவிட்டுப் பிறகு ஏதோ ஒரு காரணத்தால் அந்த வ்ரதத்தைப் பங்கம் செய்துகொண்டாரென்று நாம் அறிகிறோம். இவருக்கு முன் இவரைக் காட்டிலும் பல மடங்கு சிறந்த குணங்கள் வாய்ந்த பெரியோர்கள் இம்மாதிரி உண்ணு வ்ரதத்தைக் கைப்பற்றித் தமது இஷ்டத்தைத் தலைக்கட்டிக்கொண்டார்களென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இது க்ஷேமத்தை ஸாதித்துக் கொடுக்கும் மார்க்கமன்று என்பதை வற்புறுத்தும்பொருட்டே நாம் இந்த விஷயத்தை இவ்விடத்தில் ப்ரஸ்தாவித்தோம். அஶாஸ்த்ர விஹிதமான கர்மங்கள் முடிவில் நமக்கு அநுகூலமாயிருப்பனபோலத் தோன்றினபோதிலும், அவை இந்த லோகத்திலும் பரலோகத்திலும் நன்மையைச் செய்யாதிருப்பதுடன், பெருத்த தீமையையும் விளைவிக்குமென்று ஶாஸ்த்ரம் கூறுவதை நாம் மறக்கக்கூடாது. நிற்க: இந்த உண்ணு வ்ரதம் போன்ற அநுஷ்டானம் ஜகத்தில் பரவும் பக்ஷத்தில் ஜனங்களுக்குள் பெருத்த ஶோகமே உண்டாகும். எவனும் தனது பிடிவாதத்தால், தன் இஷ்டத்தை, அது எவ்வளவு அஸாதுவாயிருந்தாலும், இதைக் கொண்டு ஸாதித்துக்கொள்ள ப்ரயத்னப்படுவான். ஆகையால் இதன் தோஷங்களை நன்றாக உணர்ந்து 'ஸத்யாக்ரஹம்' என்னும் இந்த உபாயத்தை அடியோடு கைவிடவேண்டுமென்றே நாம் ப்ரார்த்திக்கிறோம். ஶாஸ்த்ரத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதே ச்ரேயஸ்கரம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் சந்தா வரவு

			ரூ.
	ஸ்ரீ.	S. ராகவாசாரியர், தாதர், பம்பாய் (49) ...	3
5	,,	T. K. ராமஸ்வாமி ஐயங்கார், தாதர், பம்பாய் (49) ...	3
44	,,	S. ரங்கஸ்வாமி ஐயங்கார், தாசில்தார், போளூர் (49) ...	3
47	,,	S. வரதாசார்யர், தாதர், பம்பாய் (49) ...	3
49	,,	K. ஸ்ரீநிவாஸ கோபாலையங்கார், D.S.P., ஹோஸ்பெட் (49)	3
58	,,	C. N. ஸ்ரீநிவாஸகோபாலாசார்யர், ஸ்ரீரங்கம் (48-49) ...	6
79	,,	D. P. செல்லம் ஐயங்கார், சிவஸ்வாமிபுரம், சேலம் (49)	3
116	,,	K. T. பார்த்தஸாரதி ஐயங்கார், வேலூர் சேலம் (47-48)	5
167	,,	P. A. ஸ்ரீநிவாஸாசார்யர், Rtd. A. E. சென்னை (49)	3
175	,,	B. K. குப்புஸாமி ஐயங்கார், Dt. Eng. M.S.M. குத்தி (49) ...	3
221	,,	R. வேங்கடேச ஐயங்கார், சிதம்பரம் (48-49)	6
231	,,	P. S. வீரராகவாசார்யர், தேவனூர்விளாகம் (49) ...	3
269	,,	R. ஸ்ரீநிவாஸகோபாலாசார்யர், B.A., B.L., பழைய சந்தைப்பேட்டை, புதுக்கோட்டை (48-49)	6
274	,,	M. சடகோபாசார்யர், ஒரகடம் (48) ...	3
279	,,	K. S. கோபாலஸாமி ஐயங்கார், மயிலாப்பூர் (48) ...	3
294	,,	I. ஸ்ரீநிவாஸாசார்யர், சைதாப்பேட்டை (49-50) ...	2
424	,,	R. குப்புஸாமி ஐயங்கார், ஏமப்பூர் (48)	3
437	,,	G. கோபால ஸ்ரீநிவாஸாசார்யர், காருகுரிச்சி (48-49) ...	6
442	,,	K. நரஸிம்ஹாசார்யர், குவளைவல்லி (49) ...	3
475	,,	சேட்லூர் ஸ்ரீநிவாஸாசார்யர், தூசி (49)	3
493	,,	A. நரஸிம்ஹாசார்யர், ஸ்ரீரங்கம் (49)	3
505	,,	R. கோஸகாசார்யர், திருப்புல்லாணி (48) ...	3
539	,,	S. ஸம்பத்நாராயணன், திருவல்லிக்கேணி (49) ...	3
615	,,	M. V. நரஸிம்ஹ ஐயங்கார், கோயம்புத்தூர் (48-49) ...	6
649	,,	A. V. வானமாமலாசார்யர், திருவனந்தபுரம் கோட்டை (49)	3
664	,,	S. R. ஸௌந்தரவரதாசார்யர், ஸ்ரீமுஷ்ணம் (47) ...	3
697	,,	N. A. சிங்காரம்மாள், சைதாப்பேட்டை (47) ...	3
712	,,	M. வரததேசிகாசார்யர், தியாகதுர்க்கம் (48-49) ...	6
751	,,	V. ராமஸ்வாமி ஐயங்கார், புதுப்பேட்டை (49) ...	3
754	,,	T. V. ராமையங்கார், ஸந்யாஸி க்ராமம் (49) ...	3
775	,,	P. R. கோபாலஸாமி ஐயங்கார், பஞ்சமாதேவி (49) ...	3
		மொத்தம் ரூ.	112

Regd. M. 4437.

ஸ்ரீ:

தமிழகத்தில் சிறுவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லௌகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜும்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

சார்ஜுகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம் பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ. 20.
,, உட்புறம் ,,	,,	ரூ. 15.
ஸஞ்சிகையின் உட்புறம் ,,	,,	ரூ. 10.

ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், ம... 17.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.